21.03.2013

# உதய சூரியன்

*Source for reading hunters*

களம் - 01. சூரியன் - 29 பக்கம் :32 விலை: 15/=



**இன்று இல்லாவிட்டாலும் சர்வதேச நீதிமன்றத்தின் முன் இலங்கை நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டே தீரும்**

# சவூதி எஜமானர்களுக்கு நெஞ்சில் ஈரம் இல்லையா...?

## போட்டி அரசியலில் பலிக்கடாவாகும் பாடசாலைகள்!!

# சவூதி எஜமானர்களுக்கு நெஞ்சில் ஈரம் இல்லையா...?



குடும்ப வறுமைக்கு வடிகால் தேடி எத்தனையோ பெண்கள் தமது குடும்பங்களைப் பிரிந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப் பணிப் பெண்களாகச் செல்கின்றனர். என்ன பாடுபட்டாலும் நாமும் உழைத்து முன்னேற வேண்டும் என்ற எண்ணத்தோடு வெளிநாடு செல்கின்ற பெண்களுக்கு அங்கு என்ன நடக்கின்றது என்பதை வார்த்தைகளால் சொல்ல முடியாது என்கிறார் செல்வராசா வீரம்மா.

வவுனியா செட்டிகுளத்தில் உள்ள ஒரு ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவள். ஐந்து பிள்ளைகளைப் பெற்றெடுத்த ஒரு தாய். கணவர் செல்வராசா கூலி வேலை செய்து குடும்பத்தை வழிநடத்தி வந்தார்.

1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்திய இராணுவத்தால் தாக்கப்பட்ட செல்வராசாவுக்கு ஏற்பட்ட நரம்பு ரீதியான பாதிப்பு அவரது நாளாந்த கூலி வேலைக்கும் உலை வைத்தது.

குடும்பத்தில் வறுமை தலைதூக்க செய்வதறியாது தவித்துப் போன வீரம்மாவுக்கு கிடைத்த ஒரே தீர்வு வெளி நாட்டுக்கு செல்வது தான்.

மத்திய கிழக்கு நாட்டுக்கு பணிப் பெண்களை அனுப்பும் முகவரின் தொடர்பு இவருக்கு கிடைத்தது. வீரம்மா சவூதி செல்வதற்கு முதலில் மறுத்த கணவன் குடும்ப நிலையைக் கருத்திற் கொண்டு அதற்கு இசைந்தார்.

கொழும்பு வேலைவாய்ப்புப் பணியகத்தினூடாக பதிந்து தன்னுடைய 40 ஆவது வயதில் 2012.07.21 அன்று பல கனவுகளுடன் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து வீரம்மா சவுதிக்குப் புறப்பட்டார்.

இனி எமது பஞ்சம் எல்லாம் போய் விடும் மற்றப் பிள்ளைகளை மாதிரி நீங்களும் வசதியாக வாழலாம் என தனது பிள்ளைகளுக்கு கூறிவிட்டு பயணமாகினார்.

ஆனால், அந்தக் குடும்பத்தின் எதிர்பார்ப்பு ஈடேறியதா?

சவுதியில் வேலை செய்து கொண்டிருந்த வீரம்மாவுக்கு திடீரென மயக்கம் ஏற்பட்டது. எஜமானரால் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு மருந்தும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

அதன் பிறகு நிகழ்ந்ததை தள்ளாடியபடி வீரம்மா இவ்வாறு கூறுகிறார்.

என்ர குடும்ப கஷ்டம் காரணமா நான் முகவர் மூலம் சவுதிக்குப் போனேன். எனக்கு ஒரு தடவை மயக்கம் வந்தது. வைத்தியசாலைக்கு கொண்டுபோய் மருந்து எடுத்திட்டு வீட்டுக்கு கூட்டி வந்து ஒரு அறையில விட்டு பூட்டிட்டாங்க. எஜமானியும் எஜமானனும் மாறி மாறி அடிச்சாங்க. ஏன் மயக்கம் வந்தது? யாரோட போனனீ எனப் பேசியதோட சாப்பாடும் தரயில்ல. கொதித்த எண்ணெய், நெருப்பு என்பவற்றால் சுட்டனர். நான் ஊருக்குப் போக விடுங்கோ எனக் கெஞ்சினேன். அவங்க விடல. இப்ப உடம்பெல்லாம் ஒலயுது என கூறியபடியே அமர்ந்து கொண்டார்.

வீரம்மா படும் துன்பங்களை அறிந்து கொண்ட செல்வராசா முகவருடன் தொடர்பை ஏற்படுத்தினார்.

அதற்குள் வெளிநாட்டில் இருந்த முகவர் வீரம்மாவை வேறு ஒரு வீட்டுக்கு பணிப்பெண்ணாக மாற்றி விட்டார். அங்கும் அவளுக்கு நிம்மதி இல்லை. 6 மாதத்திற்குள் 6 வீடுகள் மாறி மாறி துன்பப்பட்டாள் வீரம்மா.

உடல் நிலையைக் கருத்தில் கொண்டு கூட வெளிநாட்டிலுள்ள முகவர் அவரை உடனடியாக இலங்கைக்கு அனுப்பாது வீடுகளை மாற்றி விட்டிருக்கிறார் எனும் போது மனித உரிமைகளுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகமும் அதன் முகவர்களும் எந்தளவு முக்கியத்துவம் அளிக்கின்றார்கள் என்பதை உணர முடிகிறது.

வீரம்மாவின் வார்த்தைகளால் அவளுக்கு ஏற்பட்ட பிரச்சினைகளை உணர்ந்து கொண்ட கணவர் செல்வராசா அவளை மீண்டும் இலங்கைக்கு அழைக்க கடும் முயற்சி செய்தார். இதற்காக கொழும்பில் உள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திற்கு பலமுறை சென்றதாகக் கூறிய செல்வராசா இவ்வாறு கூறினார்.

என்ர மனிசியை சவுதில ரொம்ப சித்திரவதை செய்யிறாங்க என்று தெரிஞ்சதும் அவள இங்க அழைக்க முயற்சி செய்தேன். கொழும்பு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு பலமுறை கதைச்சன். அப்ப முகவர் இரண்டு இலட்சம் பணம் தந்தால் அல்லது வெளிநாடு போக வேற ஒரு பெண்ணைத் தந்தால் மனிசியை கூப்பிடலாம் என்றார். என்னட்ட காசு இல்ல என சண்டை போட்டன். அங்க இங்க என்று அதிகாரிகளிடம் போய்ச் சொன்னேன். கடைசியாக முகவர் இரண்டு இலட்சம் கட்டி 2013.02.02 அன்று மனிசியை இங்க கூப்பிட்டாச்சு. இப்ப நானும் மனிசியும் மாறி மாறி வைத்தியசாலைக்கு திரியுறம் என்றார்.

தனது நான்கு பற்களையும் இழந்து, உடம்பில் காயங்களுடன் தள்ளாடியபடி இலங்கை வந்த வீரம்மா வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெறமுடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

கருணை உள்ளம் படைத்த ஒருவரின் உதவியுடன் வீரம்மா வவுனியா மனித உரிமை இல்லத்திடம் ஒப்படைக்கப்பட்டார்.

மனித உரிமை இல்லத்தின் உத்தியோகத்தர் ஒருவரை தொடர்பு கொண்டு கேட்டபோது:-

எம்மிடம் வந்த வீரம்மா எதிர்நோக்கிய எல்லாப் பிரச்சினைகளையும் விரிவாக ஆவணப்படுத்தியதுடன், வைத்தியசாலையில் அனுமதித்தோம். 6 நாட்கள் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வீரம்மா தற்போது கிளினிக் சென்று வருகின்றார். இவரது உடலில் பாதிப்புகள் சில இருப்பதாக வைத்திய அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

செட்டிகுளப் பிரதேச செயலாளர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோருக்கு தெரியப்படுத்தியுள்ளதுடன், வாழ்வாதார உதவித் திட்டம் ஏதாவது வழங்குமாறும் கேட்டிருக்கின்றோம்.

வைத்திய செலவுக்கு 30,000 ரூபா வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் வழங்குவதற்கு மெடிக்கலும் எடுத்து கொடுத்திருக்கின்றோம் என தெரிவித்தார்.

இப்படி எத்தனை வீரம்மாக்கள் மத்திய கிழக்குக்கு சென்று தம் வாழ்க்கையை தொலைக்கிறார்கள்,

இதன் உச்சமாக அண்மையில் அப்பாவி றிசானாக்கள் மரணதண்டனை பெறுகிறார்கள்.

எனவே, வெளிநாடு செல்ல வேண்டும் என நினைப்பவர்களும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் இப்பிரச்சினைகளை முன்னிறுத்தி அடுத்த நகர்வுக்கு செல்வார்களா?


கே.வாசு


02 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

செல்வி. ரிஷிகேசனிகா



நீர்கொழும்பைச் சேர்ந்த குமார்–ஜோதி தம்பதிகளின் செல்வப் புதல்வி செல்வி. ரிஷிகேசனிகா தனது 2 ஆவது பிறந்த நாளை (இன்று) 21.03.2013 வியாழக் கிழமை தனது இல்லத்தில் வெகுவிமர்சையாக கொண்டாடுகின்றார். இவரை, அன்பு அம்மா, அப்பா, அக்கா (மிருது ஹம்சினி) அண்ணா (ரோஹித்) மற்றும் அம்மம்மா, தாத்தா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்திமார் (பேபி, சரோ) சித்தாமார் மாமாமார், மாமிமார் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்பதோடு, பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.



# முதியோர் நலனுக்கான நடமாடும் சேவை

முதியோரின் உரிமையைப் பாதுகாக்கும் வகையில் வருடந்தோறும் அக்டோபர் 01 ஆம் திகதி முதியோர் தினம் கொண்டாடப்படுகின்றது. இத்தினத்தில் மாத்திரம் அவர்களின் நலனில் அக்கறை காட்டுவதோடு, அவர்களது உரிமைகள் பற்றியும் பேசப்படும் வகையில் விழாக்கள் இடம்பெறுகின்றன.

தற்போதைய நிலையில் இவ்வாறான விழாக்கள் பெயரளவில் கொண்டாடப்படுகின்றனவா என்ற எண்ணம் தோன்றுகின்றது. அரசின் ஊடாக முதியோருக்கு வழங்கப்படும் சலுகைகள், கொடுப்பனவுகள் கிராம, நகரப்புறங்களைப் போன்று பெருந்தோட்டப் பகுதிகளில் சரியான முறையில் கிடைப்பதில்லை என்ற ஒரு குற்றச்சாட்டும் பரவலாகக் காணப்படுகின்றது.

இந்நிலையில் அரசின் ஊடாக வழங்கப்படும் சலுகைகள், கொடுப்பனவுகளை மலையக முதியோர்களும் உரிய முறையில் பெற்றுக்கொள்ளும் வகையில் ஜனாதிபதியின் நேரடி தலைமீட்டின் மூலம் சகல மாவட்ட செயலகங்கள் ஊடாக பல்வேறுபட்ட செயற்திட்டத்தை அமுல்படுத்தியுள்ளார்.

இதன் அடிப்படையில் டயகம பிரதேசத்தில் உள்ள முதியோரின் நலன் கருதி பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் நடமாடும் சேவை ஒன்று கிராம சேவகர் கோபிநாத் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நுவரெலிய மாவட்ட செயலாளர் சுரங்கனி பெரேரா முதியோர்திட்ட மேற்பார்வையாளர் யோகான், டயகம பொலிஸ் நிலைய அதிகாரி ஹேரத், கிராம உத்தியோகஸ்தர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர்.

இந் நடமாடும் சேவையின் போது 300 அடையாள அட்டைகள் வாழ்வாதார உதவித்தொகை, முதியோர் சங்க மேம்பாட்டிற்கான 5000 ரூபா பணமும் வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் கலந்து கொண்ட நுவரெலிய மாவட்டச் செயலாளர் சுரங்கனி பெரேரா கருத்துத் தெரிவிக்கையில்;

இலங்கை அபிவிருத்திக்கு முதுகெலும்பாக இருந்தவர்களைப் பாதுகாப்பது தனி மனிதர் ஒவ்வொருவரினதும் கடமையாகும். ஜனாதிபதியின் பணிப்புரையின் கீழ் முதியோர் பாதுகாப்பும் வாழ்க்கைத் தரமும் உயர் வேலைத்திட்டங்களை அமுல்படுத்திச் செயல்படுத்தபடுகின்றது. இத்திட்டத்திற்கான உத்தியோகத்தர் உள்ளதால் வேலைத்திட்டங்களை இலகுவாக செயற்படுத்த முடிகிறது எனத் தெரிவித்தார்.

அக்கரப்பத்தனை நிருபர்

## அட்டன் ஹைலன்ஸ் கல்லூரி பழைய மாணவர் ஒன்று கூடல்

அட்டன் ஹைலன்ஸ் கல்லூரியின் பழைய சங்க மாணவர் ஒன்று கூடல் 23 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு அட்டன் அஜந்தா விடுதியில் நடைபெறவுள்ளது.

இவ் ஒன்று கூடலின் பின் மறுதினம் ஞாயிற்றுக்கிழமை டன்பார் விளையாட்டு மைதானத்தில் கிரிக்கெட், வலைப்பந்து, கூடைப்பந்து, சிறுவர்களுக்கான விளையாட்டு ஆகிய போட்டி நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாகவும் இதற்கான இலவச அனுமதி சீட்டை ஒன்றுகூடலின் போது பெற்றுக்கொள்ள முடியுமென பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் எஸ்.விஜயசிங் தெரிவித்துள்ளதுடன், மேலதிக தகவல்களுக்கு 0512222512, 0714406393, 0718533144, 0778465019 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு அறிந்துகொள்ள முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அட்டன் நிருபர்



எஸ்.என்.எம். என்வயர்மன்ட் கிளீனர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

- உறிஞ்சல் பவுஸர் மூலம் மலகூட உபகரணத்திலிருந்து அழுக்கு நீர் அகற்றுதல்.
- ஹோட்டல்கள், தொழிற்சாலைகளில் அழுக்கு நீர் தேங்கல் நீர் / எண்ணெய்ப்படிவுகள் அகற்றுதல்

துரித அழைப்பு : 0777 236199

தலைமை அலுவலகம்

448/1, ஸ்ரீ ராஜசிங்க மாவத்த, ஹிம்புட்டான, அங்கொட

தொ.பே. 011 4962606/ 011 4966606, 94-11-2568176

கிளை அலுவலகம்

பேருவல–தொ.பே. 034-4947800 / 0777 822707

(களுத்துறை, அம்பலாங்கொடை, ஹிக்கடுவ, காலி)

கண்டி–0777 822707 / 072 7822707

(மாவனல்லை, பிலிமதலாவ, கடுகன்னாவ, பேராதெனிய, கம்பொல, குண்டசாலை, திகன, தெல்தெனிய, கடுகஸ்தோட்ட, அக்குரனை, மாத்தளை)

ஒரு நிறுவனத்தின் தலைவருக்கு தன் நிறுவனத்தில் சில தவறுகளால் 50 கோடிகள் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. மிகவும் சோர்ந்து போய் அருகில் இருந்த பூங்காவிற்குச் சென்று அங்கிருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தார்.

அப்போது சற்று பெரிய மனிதர் போல தோற்றம் உடைய ஒருவர் இவருக்கு அருகில் வந்து அமர்ந்தார். இவர் சோகமாக அமர்ந்திருப்பதைக் கண்டு, ''ஏன் சோகமாக இருக்கிறீர்கள்'' என்று கேட்டார்.

# நம்மால் முடியும்

## வாழ்க்கைக்கு வழிசொல்லும் விழிப்புணர்வுத் தொடர் 27





அதற்கு இவர் ''எனது தொழிலில் நஷ்டம் அடைந்து விட்டேன். அதனால் மிகவும் மனது உடைந்து போய்விட்டேன்'' என்றார்.

''எவ்வளவு ரூபாய் நஷ்டம்?'' என்றால் அவர்.

''50 கோடி ரூபாய்'' என்றார் இவர்.

''அப்படியா, நான் யார் தெரியுமா?'' என்று கேட்டு அந்த ஊரின் பிரபல செல்வந்தரின் பெயரைச் சொன்னார்.

அசந்து போனார் இவர்...

''சரி 50 கோடி பணம் இருந்தால் நீ சரியாகி விடுவாயா?'' என்று கேட்டார் அவர்.

உடனே முகமலர்ச்சியுடன் இவர் ''ஆமாம் எல்லாம் சரியாகிவிடும்'' என்றார்.

பின் அந்த செல்வந்தர் ஒரு செக் புத்தகத்தை எடுத்து கையெழுத்திட்டு இவரிடம் நீட்டி ''இந்தா இதில் 500 கோடிக்கு செக், நீ கேட்டதைவிட 10 மடங்கு அதிகமாக கொடுத்திருக்கிறேன். எல்லாவற்றையும் சமாளி. ஆனால், ஒருவருடம் கழித்து இந்தப் பணத்தை எனக்கு திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். அடுத்த வருடம் இதே நாளில் இங்கே நான் காத்திருப்பேன்'' என்று சொல்லிவிட்டு செக்கை இவர் கைகளில் திணித்து விட்டுச் சென்றார் அவர்.

பின் அந்த நிறுவனத்தின் தலைவர் வேகமாக அலுவலகத்திற்கு சென்றார். தன் அறைக்குள் சென்று அந்த செக்கை தனது பீரோவில் வைத்து பத்திரமாக பூட்டினார். பின் தனது உதவியாளரை அழைத்து அனைத்து ஊழியர்களை நிர்வாகக் கூட்டத்திற்கு அழைத்து வர ஏற்பாடு செய்யச் சொன்னார். ஊழியர்கள் அனைவரும் கூட்டத்தில் அமர்ந்திருந்தனர்.

இந்த நிறுவனத்தின் தலைவர் பேச ஆரம்பித்தார். '' நண்பர்களே, நமது நிறுவனத்தில் 50 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஆனால், இப்போது என்னிடம் 500 கோடி ரூபா உள்ளது. ஆனால், அந்தப் பணத்தை தொடமாட்டேன். இந்த நஷ்டம் எப்படி ஏற்பட்டது? எதனால் ஏதற்காக ஏற்பட்டது? என்று ஆராய்ந்து அதை களைந்து நமது நிறுவனத்தை வெற்றிகரமாக செயல்படுத்த நீங்கள் அனைவரும் ஒத்துழைப்புக் கொடுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார்.

பின்னர் வேலைகள் வேகமாக நடந்தன. தவறுகள் கண்டு பிடிக்கப்பட்டு களையப்பட்டன. மிக சரியாக அனைத்து ஊழியர்களையும் ஒத்துழைக்க வைத்தார். அவருடைய பேச்சு, மூச்சு, செயல், சிந்தனை, தூக்கம் அனைத்தும் அவருடைய தொழிலைப் பற்றியே இருந்தது.

மிக சரியாக ஒரு வருடம் கழிந்தது. கணக்குகள் அலசப்பட்டன. மிகச் சரியாக 550 கோடி ரூபா இலாபம் ஈட்டி இருந்தது இவருடைய நிறுவனம். அடுத்த நாள் விடிய காலை அந்த செல்வந்தர் கொடுத்த 500 கோடிக்கான செக்கை எடுத்துக் கொண்டு அந்த பூங்காவிற்கு விரைந்தார். சென்ற வருடம் அமர்ந்த அதே சிமென்ட் பெஞ்சில் அமர்ந்தார். காலை நேரம் ஆதலால் பனி மூட்டத்துடன் காணப்பட்டது. சற்று நேரம் கழித்து தூரத்தில் அந்த செல்வந்தரும் அவருக்கு அருகில் அவரை கைகளால் பிடித்துக் கொண்டு ஒரு பெண்மணியும் வந்தது பனி மூட்டத்தின் ஊடே தெரிந்தது. சில விநாடிகள் கழித்து பார்த்தால் அந்த பெண்மணி மட்டும் வருகிறார் அந்த செல்வந்தரைக் காணவில்லை.

இவர் சென்று அந்த பெண்மணியிடம் ''எங்கே அம்மா உங்கள் கூட வந்தவர்?'' என்றார்.

அதற்கு அந்தப் பெண்மணி பதற்றத்துடன் ''உங்களுக்கு அவர் ஏதாவது தொந்தரவு கொடுத்து விட்டாரா?'' என்றார்.

இவர் ''இல்லை அம்மா, ஏன் கேட்கிறீர்கள்?'' என்றார்.

அந்தப் பெண்மணி ''இல்லை ஐயா அவர் ஒரு பைத்தியம். அதாவது மனநிலை சரி இல்லாதவர், செக் தருகிறேன் என்று சொல்லி இங்கு இருப்பவர்களிடம் தனது பழைய செக்கை கிழித்து கையெழுத்திட்டு கொடுத்து விடுவார்'' என்றார்.

ஒரு நிமிடம் அந்த நிறுவனத் தலைவருக்கு பேசமுடியவில்லை. அப்போ நம்மால் முடியும் என்று நினைத்தால் நிச்சயம் முடியும். அதுவே நம்மைக் காப்பாற்றி இருக்கிறது என்று நினைத்தார்.

இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்வென்றால் எந்த ஒரு விசயமும் நம்மால் முடியும் என்று முதலில் நாம் நம்பவேண்டும் அப்போதுதான் நாம் நமது வாழ்வில் முன்னேற முடியும்.

''வாழ்வில் நீ முன்னேறு - நாளை நீ வரலாறு'' என்ற கூற்று நிச்சயம் ஒருநாள் உண்மையாகும்.

***

## மகிழ்ச்சி

நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதே நமக்குத் தெரியாததால் தான் நாம் மகிழ்ச்சி இன்றி இருக்கிறோம். ஆனால், ஒவ்வொரு உயிரும் மகிழ்ச்சிக்காக ஏங்குகிறது. பிறக்கும்போது ஒரு குழந்தை எந்தவித மனப் பதிவும் இன்றியே பிறக்கிறது. மகிழ்ச்சிக்கான ஆவல் மட்டுமே இருக்கிறது. ஆனால் அதைச் சாதிப்பது எவ்வாறு என்பது தெரியாது. வாழ்நாள் முழுவதும் அதற்காகவே போராடுவான். ஆனால் மகிழ்ச்சியாயிருப்பது எப்படி என்று குழந்தைக்குக் கற்றுக் கொடுக்கும் விதம் நமக்குத் தெரிவதில்லை. கோபம் இயற்கையானது.கோபப்படாதே என்று கூறுவதன் மூலம் அவனால் கோபத்தை ஒழித்து விட முடியாது. மாறாக அதை அடக்கி வைப்பதற்குத்தான் நாம் கற்றுக் கொடுக்கிறோம். அடக்கி வைப்பது எதுவும் அவலத்திற்கே இட்டுச் செல்லும். கோபப்படாமல் இருப்பது எப்படி என்று நாம் கற்றுக் கொடுப்பதில்லை. அவன் நம்மைப் பின்பற்றியே ஆக வேண்டியுள்ளது. கோபப்படாதே என்று சொன்னால் அவன் புன்னகை புரிவான். அந்தப் புன்னகையோ போலியானது. உள்ளுக்குள் அவன் குமுறிக் கொண்டிருப்பான். ஒரு குழந்தையை, வேசக்காரனாக, பாசாங்குக் காரனாக நாம் ஆக்கிக் கொண்டிருக்கிறோம். வாழ்க்கை முழுவதும் அவன் பல முகமூடிகளை அணிய வேண்டியுள்ளது. பொய்மை ஒருநாளும் மகிழ்ச்சிக்கு இட்டுச் செல்லாது. உங்களை நீங்கள் உள்ளபடியே ஏற்றுக்கொள்ள சமுதாயம் ஒருபோதும் சொல்லித் தருவதில்லை. பற்றுக் கொள்வதே துன்பம். ஆரம்பத்திலிருந்தே அம்மாவை நேசி, அப்பாவை நேசி என்று பற்றுக் கொள்ளுமாறு உபதேசிக்கப்படுகிறது. தாய் அன்பானவளாக இருந்தால் குழந்தை அவளிடம் பற்று வைக்காமல் அன்புடன் இருக்கும். உறவு முறைகள் நிர்ப்பந்தமாகத் திணிக்கப் படுகின்றன. பற்று என்பது உறவுமுறை. அன்பு என்பதோ ஒரு மனநிலை.

# கொட்டகலை கேம்பிரிட்ஜ் கல்லூரியின் பத்தாண்டு விழா

கொட்டகலை கேம்பிரிட்ஜ் கல்லூரியின் பத்தாவது ஆண்டு பூர்த்தி விழாவும் தொடர்ச்சியாக இதனை கல்லூரித் தினமாக கொண்டாடுவதற்குரிய அங்குராரப்பண நிகழ்வும் இன்று காலை 10.30 மணிக்கு (21-03-2013) பாடசாலையின் அதிபர் வி.லோகநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த, அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் ஆற்றலை மேம்படுத்தும் முகமாக ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரியிலிருந்து க.பொ.த. சாதாரண பரீட்சையிலும், உயர்தர பரீட்சையிலும் சிறந்த பெறுபேறுகள் தற்போது பெறப்பட்டு வருகின்றன.

நுவரெலியா வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ஜி.ஏ.பியதாசவின் வழிகாட்டலில் இடம்பெறவுள்ள இவ் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாக நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பி.ராஜதுரை கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ அதிதிகளாக நுவரெலியா வலய மேலதிகக் கல்விப் பணிப்பாளர் எஸ்.பி.ராஜசேகரம், உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.கணபதி, கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.சோமசுந்தரம், ஸ்தாபக அதிபர் எம்.ஞானப்பிரகாசம் உட்பட கல்வி அதிகாரிகளும், ஆசிரிய ஆலோசகர்களும், அதிபர்களும், ஆசிரியர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தி.தவராஜ்

# பத்தனை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் தேர்த்திருவிழா

பத்தனை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் வருடாந்த பங்குனி உத்தர அலங்கார உற்சவம் 1008 சங்காபிஷேகமும், தேர்த்திருவிழாவும் 23.03.2013 தொடக்கம் 27.03.2013 வரை இடம்பெறவுள்ளது.

2013.03.23 மாலை 5.30 மணியளவில் விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு கணபதி ஹோமம், கொடியேற்றமும் இடம்பெறவுள்ளன.

திங்கட்கிழமை 25.03.2013 காலை 7 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன், பால்குட பவனி இடம்பெற்று, நண்பகல் சங்காபிஷேகமும் தொடர்ந்து அன்னதானமும் வழங்கப்படும்.

செவ்வாய்க்கிழமை 26.03.2013 காலை 10.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையுடன் சுவாமி வெளிவீதி இடம்பெற்று, புதன்கிழமை காலை பிராயச்சித்த அபிஷேகம், விபூதி, பிரசாதம் வழங்கப்படும். மாலை வைரவர் பூஜை இடம்பெற்று கொடி இறக்கத்துடன் விழா நிறைவுபெறவுள்ளது.

கொட்டகல நிருபர்

# முப்பெரும் சேவை நிகழ்வு

பட்டக்கண்ணு அறக்கட்டளை நிலையத்தின் அனுசரணையில் இலவச கண் சிகிச்சை முகாம், DORM Theraphy மற்றும் சகஜ யோகா வகுப்புகள் போன்ற சேவைகளை உள்ளடக்கிய மாபெரும் நிகழ்ச்சியொன்று இம்மாதம் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அட்டன் நகரில் இல.53 Nursing Home வீதியில் அமைந்திருக்கும் மலையக அபிவிருத்தி நிலையம் "விழிப்பு" வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இலவசமாக இடம்பெறவுள்ள இச்சேவை நிகழ்ச்சிகளில் வசதி குறைந்த மக்கள் மட்டுமே தமது பெயர்களைப் பதிவு செய்துகொள்ள முடியும். பரிசீலிக்கப்படுபவர்களில் வாசிப்புக் கண்ணாடிகள் தேவைப்படுபவர்களுக்கு கண்ணாடிகள் அன்றைய தினமே வழங்கப்படும். விசேடமான மூக்குக் கண்ணாடிகள் செய்யப்பட வேண்டியவர்களுக்கான மூக்குக்கண்ணாடிகள் மூன்று வாரத்திற்குள் செய்துகொடுக்கப்படும். இதேபோல் கண் அறுவைச் சிகிச்சை செய்யப்பட வேண்டியவர்களுக்கு அவர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு அறுவைச் சிகிச்சைக்கான ஆதரவாளர்கள் கிடைக்கும்போது அவர்களுக்கான அறுவைச் சிகிச்சை மேற்கொள்வதற்கு உதவிசெய்யப்படும்.


மேலும் முள்ளந்தண்டு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உள்ளவர்களுக்கான சிகிச்சை முறை கடந்த மாதம் நடைபெற்ற சிகிச்சையின் தொடர்ச்சியாகவே அமையும். முள்ளந்தண்டு முதுகுவலி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உள்ளோர் தங்கள் பெயர்களை பதிவுசெய்துகொண்டு நோய்க்கான நிவாரணத்தினையும், ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

தொடர்ந்து கடந்த இரண்டு வருடங்களாக இந்த மண்டபத்தில் சகஜ யோகா வகுப்புகள் பலமுறை நடைபெற்றுள்ளன. 24 ஆம் திகதி நடைபெறும் வகுப்பில் பங்குபெறும் அனைவருக்கும் சகஜ யோகா பயிற்சி சொல்லிக்கொடுப்பதோடு ஏற்கனவே இந்த யோகா முறையில் பயிற்சி பெற்றவர்களுக்கு அதன் Advanced முறைகள் பற்றிய விளக்கங்களும் கொடுக்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் சகலரும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம். இந்த யோகா வகுப்புகளானது பயிற்சிபெற்ற ஆசிரியர்களினால் பயிற்றுவிக்கப்படுவதோடு, தற்போது இந்த சகஜயோகா பயிற்சி வகுப்புகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் அட்டன் "விழிப்பு" நிலையத்தில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சி தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 051-2225733 அல்லது 011-2423168 என்ற இலக்கங்களினூடாக வார நாட்களில் காலை 10 மணிமுதல் மாலை 4 மணி வரையான காலப்பகுதிகளில் மாத்திரம் தொடர்புகளை மேற்கொண்டு அறிந்துகொள்ளலாம்.

# பயோ DatA BY உதயசூரியன்

பெயர் :- மன் மோகன் சிங்
பதவி :- பாரதப் பிரதமர்
செல்லப் பெயர் :- சோனியாவின் கைப்பொம்மை.
நண்பர்கள் :- அடுத்தவர் பேச்சைக் கேட்டு ஆமாம் சாமி போடுபவர்கள்
எதிரிகள் :- என்னை அடிக்கடி வம்பிற்கு இழுக்கும் தமிழ்நாட்டுக்காரர்கள்
இலங்கை அரசிற்கு கூறுவது :- யுத்த காலம் தொடக்கம் கைகோர்த்திருக்கும் மஹிந்த அரசை நாம் கைவிட மாட்டோம்
பிடித்த விடயம் :- அம்மணியின் (சோனியா) முந்தானையை பிடித்துக் கொண்டு அவர் பேச்சைத் தட்டாமல் நடப்பது.
பிடிக்காத விடயம் :- என்னை சுயமாக முடிவெடுத்து பேசக் கூறுவது
அமெரிக்கத் தீர்மானம் தொடர்பாக :- கடந்த முறை போல இம்முறையும் ஏதாவது சூழ்ச்சி (?) செய்து மஹிந்தவைக் காப்பாற்றுவோம் (நண்பேண்டா?)
பொழுது போக்கு :- ஈழத் தமிழருக்கு அதிகாரம் கொடுக்கும்படி கூறுவது (ஹி.....ஹி)
தமிழக கொந்தளிப்பு தொடர்பாக :- மஹிந்தவுடனான எமது நட்பைக் குழப்ப சில புல்லுருவிகள் செய்யும் சதி (சபாஷ்)
இலங்கை தமிழர் தொடர்பாக :- ஹி....ஹி..... சோனியா அம்மையாரிடம் கேட்டுச் சொல்கிறேன். (எப்போது..?)



எம்.தாசன்

(யாவும் கற்பனை)


# தபால் மூலம் தையல் பயிற்சி

நவ நாகரிக ஆடை வடிவமைப்பில் மிகவும் நேர்த்தியான முறையில் தையல் பயிற்சி ஆரம்பமாகவுள்ளது.

- அனைத்து ஆடை வகைகளும் தென்னிந்தியா முறைப்படி கற்றுக் கொள்ள முடியும்.
- அனைத்து ஆடை வகைகளும் மிகவும் இலகுவான முறையில் கற்றுக் கொடுக்கப்படும்.
- எந்த பிரதேசத்தில் இருந்தாலும் இப் பயிற்சியை தொடர முடியும்.


வயதெல்லை கிடையாது

தென்னிந்தியாவில் பயிற்சிப்பெற்ற பிரபல தையல் கலை நிபுணர். திருமதி. ராஜேஸ்வரிகுமார் அவர்களின் வழிகாட்டலின் கீழ்.

தொடர்புகளுக்கு:
077-9643159, 071-1697918





## கண்ணாமூச்சி




a
பாவனா




b
அசின்




c
தமன்னா



## சூப்பர் டூப்பர்



01
02
03
04




## யாரது

?

* இவர் தமிழ்த் திரைப்பட நடிகையும் தொலைக் காட்சித் தொகுப்பாளரும் ஆவார்.
* இயக்குநர் பாலச்சந்தரால் தமிழ் திரையுலகிற்கு அறிமுகம் செய்யப்பட்டவர்.
* இவரது தந்தை திரைப்படங்களை தயாரிப்பவர். இவருடைய தாய் சிறந்த நடிகை ஆவார்.
* 1970 ஆம் ஆண்டுகளில் நான்கு தென்னிந்திய மொழிப்படங்களிலும் வெற்றிக்கொடி நாட்டியவர் இவர்.
* இவர் 400 திரைப்படங்களுக்கு மேலாக நடித்துள்ளார்.
* இவர் சிவாஜிகணேசன், முத்துராமன், ஜெயகாந்த், ரகுவரன், கமல், ரஜினி போன்ற நடிகர்களுடன் இணைந்து நடித்துள்ளார்.

இவர் யார்?




## படத்தைப் பார்த்து விடையைச் சொல்லுங்கள் பார்க்கலாம்....

1. இது எந்தத் திரைப்படத்தின் காட்சி ?
2. இந்தத் திரைப்படத்தின் இயக்குநர் யார்?
3. விழி அசைவின் உன் இதழ் அசைவில் இந்த பாடலின் முதல் வரியை கண்டுபிடியுங்கள்....
4. இத்திரைப்படத்தின் இசையமைப்பாளர் யார்?

புதிர் BOX பகுதிக்கான உங்கள் விடைகளை 02 ஆம் பக்கத்தில் உள்ள எமது முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

# வார்த்தைப் புதிர் - 51



### இடமிருந்து வலம்

01. பத்திரிகை அச்சிட இது தேவை.
10. ஆற்றைக் கடக்க இது தேவை.
11. மரக்கறி வகையில் ஒன்று.
12. இடி முழக்கத்திற்கு முன் வருவது.
15. நடுராத்திரி.
17. ஆபத்து வேளையில் கைகொடுப்பவன்
19. வாழ்க்கைக் கணக்கை முடிக்க வருபவர்.
20. எண்சாண் உடம்புக்கு இதுவே பிரதானம்.
21. பொழுதுபோக்குச் சாதனங்களில் ஒன்று.

### வலமிருந்து இடம்

03. பரவும் நோய்.
05. தொழிலாளி.
06. சாதுவான குணமுள்ள ஒரு காட்டு விலங்கு.
16. ஒரு மீன் உணவு

### மேலிருந்து கீழ்

01. கருத்துப்பட ஓடியம் ஆங்கிலத்தில்.
02. அரும்பு (குழம்பியுள்ளது)
03. எமது மக்களின் பொழுதுபோக்கு சாதனங்களில் மிகப் பிரதானமானது
04. இறைச்சி என்பது ஆங்கிலத்தில்.
05.கவிஞன்
09.நீராகாரம்
12. திருமணமான பெண்கள் அணியும் ஒரு அணிகலன்.
13. இவன் பலசாலி.
14. இன்று பல நாடுகளின் பொருளாதார வீழ்ச்சிக்கு இது காரணமாக இருக்கிறது. (குழம்பியுள்ளது)
15. வாகனத்தை செலுத்துபவன்
18. பின் என்பதன் எதிர்ப்பதம்.

### கீழிருந்து மேல்

07. ஆண் ஆட்டுக்குட்டி.
08. விருப்பல்ல. (குழம்பியுள்ளது)
22. தோரணம் கட்ட இது உதவும்.

# நிறுத்தல் அளவை திணைக்களத்தின் அதிரடி நடவடிக்கை!

## வாடிக்கையாளர்கள் நன்மையடைவார்களா?

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் உள்ள வர்த்தக நிலையங்கள் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினால் சோதனை இடப்பட்டதாக அளவீட்டு அலகுகள், நியமங்கள் திணைக்கள வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்ட பொறுப்பதிகாரி பாலஸ்கந்தன் இராஜேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது; வர்த்தக நிலையங்களில் பொருட்களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்கள் பொருட்களை நிறுத்து வாங்குகின்ற போது பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். பொருட்களின் நிறை சரியான முறையில் நிறுக்கப்படாது சில வர்த்தகர்களால் பொருட்கள் வழங்கப்பட்டு வந்தது. இது தொடர்பான பிரச்சினைகள் சில மக்களால் சம்மந்தப்பட்ட திணைக்களத்திற்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் வவுனியா, மன்னார் மாட்டங்களில் உள்ள வர்தக நிலையங்களில் நிறுத்தல் அளவை தொடர்பாக எமது திணைக்கள உத்தியோகத்தர்களினால் சோதனை நடத்தப்பட்டு வருகிறது. இதில் இந்த வாரம் மேற்கொண்ட சோதனைகளின் போது நிறுவை அளவை தொடர்பான பிரச்சினைகள் இருப்பதாக இனங்காணப்பட்ட வவுனியா மாவட்டத்திலுள்ள 09 வர்த்தகர்களுக்கு 19 ஆம் திகதி வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் வெய்யப்பட்டுள்ளதுடன், மன்னார் மாவட்டத்தில் இனங்காணப்பட்ட 06 வர்த்தகர்களுக்கு எதிராக இன்று 21 ஆம் திகதி மன்னார் நீதவான் நீதிமன்றத்திலும் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது எனத் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த ஜனவரி மாதத்தில் வவுனியாவில் 07 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 12,000 ரூபா அபராதமாக விதிக்கப்பட்டதுடன் அதில் 03 வழக்குகள் நிலுவையில் உள்ளதோடு, கடந்த பெப்ரவரி மாதம் வவுனியாவில் 17 வர்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 42,000 ரூபாவும், மன்னார் மாவட்டத்தில் 17 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 32,500 ரூபாவும் அபராதமாக வித்திக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த 2012 ஆம் ஆண்டு நிறுத்தல் அளவை பிரச்சினைகளுடன் தொடர்புடைய 73 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போதும் 56 வழக்குகளே தீர்க்கப்பட்டு 186,500 ரூபா அபராதமாக வவுனியா நிதீவான் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டது.

நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரை இடத்தவறியவர்கள் மாவட்ட செயலகத்தில் உள்ள அளவீட்டு அலகுகள், நியமங்கள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு முத்திரை இட்டுக்கொள்ள முடியும்.

எனவே நிறுத்தல் அளவைத் திணைக்களத்தின் இந்த அதிரடி நடவடிக்கை காரணமாக வாடிக்கையாளர் நன்மை பெறுவார்களா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

--கே.வாசு--

---

# ஏன் இந்த முடிவு..!

இன்று எம்மில் எத்தனையோ பேர் பல்வேறு காரணங்களுக்காக தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்டு வாழ்க்கையின் முதல் பாகத்திலேயே தங்களுடைய வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துக் கொண்டு ஒளிமயமான எதிர்காலத்தை இருளாக்கிக் கொள்கின்றனர்.

அதிலும் நம் நாட்டைப் பொறுத்தவரையில் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை தற்கொலை என்பது சர்வ சாதாரணமாகமாறிவிட்டது. இந்தத் தற்கொலைகளின் பின்னணியில் இருப்பது சிறுசிறு அற்ப விஷயங்கள் மாத்திரமே.

இவ்வாறான தற்கொலை முயற்சிகளில் பெரும்பாலும் ஈடுபடுவது பாடசாலை மாணவர்களே. அந்த வகையில் நாவலப்பிட்டி, கெட்டபுலா டொப் டிவிசன் தோட்டத்தில் நேற்று 11 வயது சிறுமி ஒருவர் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் உயிரிழந்த சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு தூக்கிட்டு தற்கொலை செய்துக் கொண்டது கெட்டபுலா தமிழ் மகா வித்தியாலயத்தில் தரம் 6 இல் கல்வி கற்ற செல்வம் சங்கவி என்ற சிறுமியாவார்.

இரண்டு சகோதரிகளுக்குத் தங்கையான இவர் கடந்த செவ்வாய்க்கிழமை காலை பாடசாலைக்குச் செல்வதாக வீட்டை விட்டுச் சென்றுள்ளார்.

சிறுமியின் பெற்றோர் வேலைக்குச் சென்ற வேளையில் பாடசாலைக்குச் செல்லாது மீண்டும் வீட்டுக்குத் திரும்பிய சிறுமி வீட்டின் சமையலறைக் கூரைப் பகுதியில் தூக்கிட்டு உயிரிழந்த நிலையில் தொங்கிக் கொண்டிருப்பதை அயலவர்கள் கண்டுள்ளனர்.

தொடர்ந்து இவ்விடயம் நாவலப்பிட்டி பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சிறுமியின் மரணம் குறித்து விசாரணைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் தற்கொலை, வாழ்வின் மீதான நம்பிக்கையின்மையின் வெளிப்பாடு என்றே கருதப்படுகிறது. பொறுமையும், சகிப்புத் தன்மையும், முக்கியமாக குடும்ப உறவுகளில் பிடிப்பின்மையும் இத்தகைய காலமாற்றத்தின் காரணம் எனலாம்.

வாழ்க்கை நாகரீகத்தின் அடித்தளத்தில் அமைக்கப்படாமல், உண்மை உறவுகளினூடாக கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதையே இச் சம்பவங்கள் சுட்டிக் காட்டுகின்றன.



# இன்று இல்லாவிட்டாலும் சர்வதேச நீதிமன்றத்தின் முன்

# இலங்கை நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டே தீரும்

கொந்தளித்துக் கொண்டிருக்கும் ஜெனீவா அமர்வில் இலங்கை தொடர்பாக அமெரிக்காவினால் கொண்டு வரப்படும் நகல் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு நிறைவேற்றப்படுமா? அல்லது வாக்கெடுப்புக்கு விடப்படாமல் ஏற்றுக்கொள்ளப்படுமா? இன்று வியாழக்கிழமை (மார்ச் 21 இல்) தெரிந்துவிடும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் 47 நாடுகள் உறுப்புரிமை பெற்றுள்ளன. அவற்றில் ஆபிரிக்க நாடுகளின் எண்ணிக்கை 13, ஆசிய நாடுகள் 13, லத்தின் அமெரிக்கா மற்றும் கரிபியன் நாடுகள் 08, மேற்கு ஐரோப்பிய நாடுகள் 07, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் 08.

2012 மார்ச் மாதம் நடைபெற்ற ஜெனீவா ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் ஒன்பது மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. எதிர்த்து 15 நாடுகள் வாக்களித்தன. எட்டு நாடுகள் நடுநிலை வகித்தன. அமெரிக்காவின் பிரேரணைக்கு இந்தியாவும் ஆதரவாக வாக்களித்தது.



இரா.சம்பந்தன்

இலங்கை அரசாங்கம் போர் முடிவுக்கு வந்த தன் பின்னர் நியமித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரியே அமெரிக்கா 2012 ஜெனீவா அமர்வில் தீர்மானத்தை முன்வைத்தது.

ஓராண்டு கழிந்து ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் இலங்கை அரசாங்கத்திடமிருந்து முன்னேற்றமெதனையும் காணவில்லை என்று கூறியே அமெரிக்கா இரண்டாவது தடவையாகக் கொண்டுவந்த பிரேரணை மீதான வாக்கெடுப்பே வியாழக்கிழமை நடைபெறவிருக்கிறது. இது நடைபெறுமா? நடைபெறாதா? ஏகமனதாக நிறைவேற்றப்படுமா? எல்லாம் சஸ்பென்ஸாக இருக்கிறது.

இது தொடர்பாக இடம்பெற்ற இராஜதந்திர நகர்வுகளில் எல்லாம் தங்கியுள்ளது. கொண்டுவரப்படவுள்ள பிரேரணை குறித்து அமெரிக்காவுடன் பேசி இணக்கத்திற்கு வரும்படி இந்தியா, இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டது.

நாம் அமெரிக்காவுடன் பேசமாட்டோம் என்று பகிரங்கமாகக் கூறிய இலங்கை அரசாங்கம் இந்தியாவைச் சேர்ந்த அரசியல்வாதி டாக்டர் சுப்பிரமணிய சுவாமி ஊடாக அமெரிக்காவுடன் பின்கதவால் பேசிப்பார்த்தது. கொழும்பிலிருந்து சில இராஜதந்திரிகளையும் வாஷிங்டனுக்கு அனுப்பி இரகசியப் பேச்சுவார்த்தை நடத்தியதாக அவதானிகள் கருதுகின்றனர். இந்நிலையில் அமெரிக்காவினால் கொண்டு வரப்படும் இலங்கை தொடர்பான தீர்மானத்தை ஆதரிப்பதா என்பது பற்றி வெளிப்படையாக இன்னும் இந்தியா கருத்து வெளியிடவில்லை.

அமெரிக்காவின் பிரேரணையை ஆதரிக்க வேண்டும் எனக் கோரி தமிழ்நாட்டில் உண்ணாவிரதப் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடே கொந்தளிக்கின்றது. இந்தியாவில் அமெரிக்காவின் தீர்மானத்தை ஆதரித்து நடத்தப்படும் உண்ணாவிரதம் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் பற்றி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.




இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் இடம்பெறுகின்ற உண்ணாவிரதம் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் வெறும் வேஷம் மற்றும் கோஷங்கள் அல்ல. இலங்கை தமிழர் பிரச்சினை குறித்த தங்களது மன உணர்வுகளையே இந்திய மக்கள் பிரதிபலிக்கின்றனர். தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் லண்டனில் நடைபெற்ற உலகத் தமிழர் பேரவை மாநாட்டில் உரையாற்றினார்.

ஜெனீவா சென்றார். லண்டன் மாநாட்டில் சம்பந்தன் உரையாற்றுகையில், ‘‘இன்று இல்லாவிட்டாலும் என்றோ ஒரு நாள் போர்க்குற்றங்களுக்காக சர்வதேச நீதிமன்றத்தின் முன்னால் இலங்கை நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டே தீரும்’’ என்று தெரிவித்தார்.

ஜெனீவா அமர்வில் இந்தியாவின் நிலைப்பாடு எவ்வாறு அமையும் என்று கேட்டதற்கு, ‘‘இந்தியா அமெரிக்காவின் இலங்கை தொடர்பான தீர்மானத்திற்கு ஆதரவாகவே செயற்படும். உண்மையை உணர்ந்து உண்மையாகச் செயற்படவேண்டும் என்று இந்தியாவிற்கு தெரிவித்துள்ளோம்’’ என்று சம்பந்தன் தெரிவித்தார்.

இராஜதந்திர மட்டத்திலிருந்து கிடைத்த தகவல்களின்படி அமெரிக்காவினால் கொண்டுவரப்படும் இலங்கை தொடர்பான பிரேரணைக்கு இந்தியா ஆதரவு வழங்கும் என்பது உறுதியாகியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அமெரிக்கப் பிரேரணையின் கனதியைக் குறைக்கும் நடவடிக்கையில் இந்தியா, இலங்கை சார்பாக ஈடுபடுவதாக பிந்திய தகவல்கள் தெரிவித்தன. பிரேரணையில் காணப்படும் சொற்களை மாற்றுவதன் மூலம்தான் கனதியைக் குறைக்கும் முயற்சியில் இராஜதந்திரிகள் ஈடுபடுகின்றனராம்.

URGESS என்ற சொல்லை ENCOURAGES என்று மாற்றுவதன் மூலம் (வலியுறுத்துவது என்பதை ஊக்குவிப்பது) கனதி குறைப்படுகின்றதே தவிர பிரேரணையின் கருத்து காரசாரமாகவே இருக்கும் என்பது அவதானிகள் கருத்தாகும்.

எவ்வாறாயினும் ஜெனீவா அமர்வுகள் தொடரத்தான் போகின்றன. இலங்கையின் களநிலைவரத்தில் இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணப்படும்வரை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஜெனிவா அமர்வுகளில் இலங்கை, விவாதத்திற்குட்படுத்தப்படும் ஒரு நாடாக அமையப் போகிறது.

அதுவரை போர்க்குற்றச்சாட்டுகளுக்காக சர்வதேச நீதிமன்ற விசாரணைக்கு முகம்கொடுக்க வேண்டும் என்ற அச்சுறுத்தலுக்கு இலங்கை ஆளாகுவது தொடரத்தான் போகிறது.

அநாமிகன்





# தலைகீழ் பார்வை கொண்ட செர்பியா பெண்!

சராசரி மனிதர்களின் விழித் திரைகளில் தெரியும் உருவம், தலைகீழாக தான் தோன்றும். அந்த உருவம், மூளைக்கு கொண்டு செல்லப்பட்டு மீண்டும் ஓர் தலைகீழ் மாற்றத்து டன் நேரிய உருவமாக நமது மனத்திரையில் பதிவாகிறது.

ஆனால், செர்பியா நாட்டைச் சேர்ந்த போஜானா டேனிலோவிக் (28) என்ற பெண்ணின் மூளையில் பதிவாகும் உருவப்பதிவுகளை தலைகீழாக மாற்றும் செயல்பாட்டில் குறைபாடு உள்ளதால், செய்தித் தாள், டி.வி, கணனி என அனைத்தையும் அவர் தலைகீழாக வைத்தே பார்க்க வேண்டியுள்ளது.

பிறவியில் இருந்தே தனக்கு இந்தக் குறைபாடு உள்ளதாகவும், வீட்டில் குடும்பத்தினருக்கு ஒரு டி.வி.யும் தனக்கென்று தலைகீழாக பொருத்தப் பட்ட தனி டி.வி.யும் இருப்பதாகக் கூறுகிறார் போஜானா டேனிலோவிக்.


# 5 கணவர்களுடன் ஒரே வீட்டில் வாழும் அதிசயம்

அண்ணன் தம்பிகள் 5 பேரை திரௌபதி திருமணம் செய்து கொண்ட சம்பவம் பற்றி இதிகாசமான மகாபாரதத்தில் படித்திருப்போம். ஆனால் இன்றைய கால கட்டத்தில் ஒரு பெண் 5 கணவர்களுடன் ஒரே வீட்டில் வசித்து வருகிறார்.

21 வயதாகும் ரஜோ வர்மா என்பவர் தனது 5 கணவர்களுடன் டேராடூன் அருகே உள்ள கிராமத்தில் ஒரே வீட்டில் வசித்து வருகிறார். இவர்களுக்கு ஒரு குழந்தை இருக்கிறது. ஆனால் அந்தக் குழந்தைக்கு தந்தை யார் என்பது யாருக்கும் தெரியாது. அதைப் பற்றி கவலைப்படவும் இல்லையாம் அவர்கள்.

21 வயதான குட்டுதான் ரஜோ வர்மாவின் கணவர். நான்கு வருடங்களுக்கு முன்னர் இந்து திருமண முறைப்படி இவர்களின் திருமணம் நடைபெற்றுள்ளது. பின்னர் சில வருடங்களில் அவர்களின் சகோதரர்களான பாஜ்ஜூ (32), சாந்த் ராம் (28), கோபால்(26), தினேஷ் (26) ஆகியோரை திருமணம் செய்து கொண்டார்.

இது குறித்து ரஜோ கூறுகையில்; தனது தாயார் அண்ணன் தம்பிகள் மூன்று பேரை திருமணம் செய்து கொண்டு மனைவியாக வாழ்ந்தார். தனக்கும் அதுபோல ஒரு வாழ்க்கை கிடைத்திருக்கிறது என்கிறார்.





# 38,000 அடி உயரத்தில் பிறந்த குழந்தை!

தென் ஆபிரிக்க பெண்ணொருவருக்கு 38,000 அடி உயரத்தில் குழந்தை பிறந்துள்ளது. தென் ஆபிரிக்க பெண்ணான படவுமாடா காபா, ஜோகன்ஸ் பெர்க்கிலிருந்து நியூயோர்க் நோக்கி பயணித்துக் கொண்டிருந்தார். நிறைமாதக் கர்ப்பிணியான இவருக்கு நடுவானத்தில் பிரசவ வலி ஏற்படவே விமானத்திலிருந்த இரண்டு மருத்துவர்கள் பிரசவம் பார்த்தனர். இதனால் இக்குழந்தை 38,000 அடி உயரத்தில் விமானம் பறந்து கொண்டிருந்தபோது பிறந்தது. இவ்விமானம் நியூயோர்க்கின் கென்னடி விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டதும் தாயையும் சேயையும் மருத்துவமனையில் அனுமதித்தனர். தற்போது இவர்கள் நலமுடன் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இவரது கணவர் கெம்பியா நாட்டைச் சேர்ந்தவர். அமெரிக்க வான் பரப்பில் குழந்தை பிறந்தாலும் அந்நாட்டு குடியுரிமை வழங்கப்பட மாட்டாது என்ற தகவலும் வெளியாகியிருக்கிறது.






# இராட்சத கால்களை உடைய வினோத பெண்

மிகவும் அரிதான ஒரு நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளார் மண்டி செல்லர் எனும் 38 வயதான பெண்.

இவர் தனது வலது காலை ஒரு மிகப்பெரிய பாரமாகவே பார்க்கிறார். காரணம், இவரது வலது காலின் எடை சுமார் 107.95 கிலோ கிராம்களை கொண்டுள்ளது.

இது ஒரு வகை குறைபாட்டு நோயே. இதனை சரி செய்வதற்காக மருத்துவர்கள் போராடி வருகிறார்கள். இருந்தும் இதனை சரிவர குணப்படுத்த முடியவில்லை.

தொடர்ந்தும் இவரது காலின் எடை அதிகரித்துக் கொண்டு செல்லவே மருத்துவர்கள் காலை அகற்றிவிட்டு செயற்கைக் கால்களை பொறுத்தும் முயற்சியை முன்னெடுத்து வருகின்றனர்.





# தினமும் 300 முறை கைகழுவும் வினோத பெண்

மலேசியாவைச் சேர்ந்த 40 வயதான யூலியா அப்துல்லா என்கின்ற பெண் தன்னிடமுள்ள ஒரு பழக்கத்தால் வேலை இழந்து மனநோய்க்கு ஆளாகிய சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

மலேசியாவில் மருத்துவ ஆய்வு கூடம் ஒன்றில் நோயாளிகளிடமிருந்து சேகரிக்கப்படும் இரத்தம், சிறுநீர் இவற்றை பரிசோதனை செய்வதே இவரது வேலை.

மேலும் எச்.ஐ.வி மாதிரிகளையும் பரிசோதனை செய்து வந்த இவர் காலப்போக்கில் அடிக்கடி தனது கைகளை கழுவுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார். கைகளை மட்டுமின்றி தனது தலைமுடியையும் அடிக்கடி கழுவும் வினோத பழக்கத்திற்கு அடிமையாகினார்.

ஒரு நாளைக்கு 300 தடவைகள் கை கழுவுவதையும், 25 தடவைகள் தலைமுடியை ஷாம்புபோட்டு கழுவுவதையும் பழக்கமாகக் கொண்ட இவர் தினமும் 5 மணித்தியாலங்கள் இதற்காக செலவிடுகிறார்.


இவரின் இந்த பழக்கத்தை கண்காணித்த நிர்வாகம் உடனடியாக இவரை வேலையை விட்டு நிறுத்தியது. பின்பு இவரை பரிசோதனை செய்ததில் மனநோய்க்கு ஆளாகியமை தெரியவந்துள்ளது.

தற்போது சிங்கப்பூரில் உள்ள மருத்துவமனை ஒன்றில் இவருக்கு மனநல சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. கழுவிக் கழுவியே இவரது கைகள் இப்படி காட்சியளிக்கின்றன.



# வழி தவறிய பெற்றோரால் வாழ்க்கையை முடித்துக்கொள்ள முயன்ற குழந்தைகள்

# தம்புள்ளை சம்பவம்!



தாய்ப் பாசத்தை மிஞ்சிய பாசம் இவ்வுலகில் இருக்க முடியாது. தாய்ப் பாசம் என நான் குறிப்பிட்டது மனிதனுக்கு மட்டுமல்ல இந்த உலகில் வாழும் ஒவ்வாரு உயிரினத்துக்கும் தான்.

தான் ஈன்றெடுத்த தன் குட்டி தெருவோரத்தில் நடக்க முடியாமல் பரிதவித்த போது அதனை வேட்டையாட வந்த ஒரு நாயிடம் இருந்து தன் உயிரை துச்சமென மதித்து அந்த நாயிடம் போரிட்டு தனது குட்டியின் உயிரை காப்பற்றிய ஒரு குரங்கின் பாசத்தை அண்மையில் இணையத்தளத்தில் பார்த்து பலரும் வியந்தார்கள்.

இது மனிதனை மிஞ்சிய தாய்ப் பாசம் !

தன்னை, தன் இன்ப துன்பங்களை, ஏன் தன் உயிரையே கூட தனது குழந்தைக்காக இழக்கத் துணிபவள்தான் தாய்!

ஆனால் அண்மையில் தம்புள்ளையில் நடந்த சம்பவம் தாய்ப்பாசத்திற்கு களங்கமான விதிவிலக்கான தாய்மாரும் இந்த உலகில் இருக்கிறார்கள் என்ற கசப்பான உண்மையை பறைசாற்றுகிறது.

தாய், தந்தை உயிரோடு இருந்தும் கூட, அநாதைகளாக திரிய வேண்டி வருமென்று அந்தக் கனவில் கூட நினைத்து பார்த்திருக்க மாட்டார்கள்.

தங்க வீடின்றி உண்ண உணவின்றி பரிதவித்துப் போன 3 குழந்தைகள் தம் வாழ்க்கையையே முடித்துக்கொள்ளும் அளவிற்கு அவர்களை கொண்டு சென்றவள் ஒரு தாய் என்றால் நம்ப முடிகிறதா?

சிரோமி பியன்கா (20 வயது) அனோஜா தில்ஹானி (17 வயது) இவர்களின் தம்பி திலான் மதுலால் (14 வயது) இவர்கள் மூவரும் தம்புள்ளையை பிறப்பிடமாகக் கொண்டவர்கள்.

இந்தப் பிள்ளைகள் ஒரளவு பக்குவ வயதையடைந்திருந்த போதும், அவர்களின் பெற்றோர் அப்படியில்லை என்பதை கதையின் ஊடாக உங்களுக்கே தெரிய வரும்.இவர்களின் தந்தை வேறொரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்ததால் வீட்டில் தினமும் பிரச்சினை! கடைசியில் அந்தப் பெண்ணுக்காக குடும்பத்தையே நடுத்தெருவில் நிறுத்திவிட்டு சென்று விட்டார்.

அதற்கு பிறகு குடும்ப சுமை தாய் சியானியின் தோள்களுக்கு மாறியது. பெரும் போராட்டத்துக்கு மத்தியில் மூன்று பிள்ளைகளையும் படிக்க வைத்து குடும்பத்தை வழிநடத்தி சென்றாள்.

தாயின் கஷ்டத்தை மூத்த பிள்ளை சிரோமியும் பாதியாக பொறுப்பேற்றுக் கொண்டாள். உயர்தரத்தை முடித்துவிட்டு வேலைக்காக சென்றாள். தம்பி, தங்கையை எப்படியாவது படிக்க வைக்க வேண்டுமென்பதற்காக கடுமையாக உழைத்தாள்.

இந்த நிலையில்தான் தாயின் நடவடிக்கையில் மாற்றம் தெரிந்தது. கொஞ்சம் கொஞ்சமாக பிள்ளைகளை வெறுக்கத் தொடங்கினாள். காரணம் வேறொரு ஆடவனுடன் அவருக்கு ஏற்பட்ட தொடர்பு !

விடயத்தை அறிந்து கொண்ட சிரோமி தாயிடம் எவ்வளவோ மன்றாடினாள். காதல் மோகம் தாய்ப்பாசத்தை வென்றது.

தான் பெற்ற பிள்ளைகளை என்றும் பாராமல் வார்த்தைகளால் அந்த பிஞ்சு உள்ளங்களை காயப்படுத்தினாள்.

இறுதியில் உங்களால் எனக்கு பிரச்சினை எங்காவது தொலைந்து போங்க, என்னையும் எனது (கள்ள) கணவனையும் சந்தோஷமாக வாழவிடுங்க " என கூறினாள்.

அம்மா எங்களை தனியா விட்டுவிட வேண்டாம், தம்பி தங்கையோடு எங்கே போவது " என்று கூறி காலில் விழுந்து கதறினாள். சிரோமி ஆனால் தாயின் நெஞ்சம் கரையவில்லை.

தனது பிள்ளைகள் தனக்கு தொந்தரவு செய்வதாக சீகிரிய பொலில் நிலையத்தில் முறைப்பாடு செய்தாள். பொலிஸ் அதிகாரிகள் பிள்ளைகளை விசாரித்தார்கள்.

அவர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பிள்ளைகளால் பதிலளிக்க முடியவில்லை. காரணம் பதில் சொல்லும் அளவுக்கு உடம்பில் சக்தி இருக்கவில்லை. நிலைமையை புரிந்துக்கொண்ட அதிகாரிகள் சாப்பாட்டை வாங்கிக் கொடுத்து விட்டு தலையில் இடியை தூக்கிப் போட்டார்கள். ஆம்! தாயிடம் வீட்டையும் இடத்தையும் கொடுத்துவிட்டு போகுமாறு பொலிஸார் சொல்ல அவர்கள் ஸ்தம்பித்துப் போனார்கள்.

எங்கே போவது? என்ன செய்வது என்று தெரியாமல் இரண்டு மூன்று துணிமணிகளை பையொன்றில் போட்டுக்கொண்டு கால்போன திசையில் போனார்கள்.

ஒரு கட்டத்தில் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொள்ளலாமென சிரோமி சிந்தித்தாள்.

இல்லை! நான் இறந்த பின் தம்பி, தங்கைகள் என்ன செய்வார்கள்? இறந்தால் நாம் அனைவரும் ஒன்றாகத்தான் இறந்து போகவேண்டும் என எண்ணினாள்.

அதனை செயற்படுத்த தனது தம்பி தங்கைகளை அழைத்துக்கொண்டு ரயிலுக்கு முன்பு பாய்ந்து தற்கொலை செய்துக்கொள்ளலாமென முடிவுடன் சென்றார்கள்.

வழியில் சித்தி உறவு முறையுள்ள பெண்ணை சந்தித்தார்கள். ஈவிரக்கமின்றி பெற்ற பிள்ளைகளை நிர்க்கதியாக்கிவிட்டு சென்ற தன் தாயைப் பற்றியும் தந்தையைப் பற்றியும் சொல்லியழ பதறிப்போனாள் சித்தி. தற்போது சித்தி தன் வீட்டில் இந்த குழந்தைகளுக்கு அடைக்கலம் கொடுத்தாள்.

இரக்கம் மிகுந்த சித்தியால் மூன்று பிள்ளைகளின் உயிர் காப்பாற்றப்பட்டு விட்டது.

ஆனால் அவர்களின் எதிர்காலம்...?

(குடும்பத்தில் பிள்ளைகள் தவறு செய்தால் தாயிடமோ அல்லது தந்தையிடமோ சொல்லி தவறை சுட்டிக்காட்டித் திருத்த முடியும் ஆனால் அதே பெற்றோர் வழி தவறிச் சென்றால் பிள்ளைகளின் நிலைமை என்னவாகும்?)

- சசிகலா புஷ்பராஜா -

தினக்குரல்
Voice of Students
இலவச இணைப்பிதழ்
வெள்ளி தோறும்
# வித்யாதரம்
கல்வியால் ஆகாதது ஒன்றுமில்லை

33 T I

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஆகஸ்ட்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

| கணக்கீடு I<br>Accounting I | ஆசிரியர்:<br>D. SAM | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலங்கள்<br>Two hours |
|---|---|---|

**சென்ற வாரத் தொடர்ச்சி .....**

14. பொதுத் தேவை நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கீழ்வருவனவற்றுள் எந்தக் கூற்று சரியானது?

(1) வெளிவாரி பாவனையாளர்கள் சகலரினாலும் உபயோகிப்பதற்கான பொதுவான தகவல்களை வழங்குதல்.

(2) தீர்மானம் மேற்கொள்ளல் தேவைகளுக்காக முகாமையினால் பொதுவாகத் தேவைப்படும் ஏதாவது அறிக்கையினை உட்படுத்தும்.

(3) வெளிவாரிப் பாவனையாளரினால் பொதுவாக ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த போதிலும் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு நம்பத்தகுந்தது அல்ல.

(4) தமது சொந்த கணக்கீட்டுத் தகவல்களை பெற்றுக்கொள்ள முடியாத பலதரப்பட்ட பாவனையாளர் குழுமங்களின் பல்வேறுபட்ட தேவைகளை திருப்தி செய்யும் நோக்கம் கொண்டது.

(5) அனைத்து முடிவுக் கணக்குகளும்

15. தனபாலன் நிறுவனம் தொடர்பாக 2011 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தவகல்கள் வருமாறு:

| | ரூபா |
|---|---|
| மூலப்பொருட்கள் இருப்பில் வீழ்ச்சி | 75 000 |
| மூலப்பொருட்கள் கொள்முதல் | 810 000 |
| மூலப்பொருட்கள் திருப்பி அனுப்பல் | 40 000 |
| வெளிக் காவுதல் | 64 000 |
| உட்காவுதல் | 37 500 |
| நேர் கூலி | 371 000 |
| உற்பத்தி மேந்தலை | 214 000 |
| புத்துருவாகும் பொருள் அதிகரிப்பு | 29 400 |
| பெற்ற கழிவு | 16 000 |

உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் தொழிற்சாலைக் கிரயம் என்ன?

(1) ரூபா 1 348 000
(2) ரூபா 1 439 200
(3) ரூபா 1 503 200
(4) ரூபா 1 487 200
(5) ரூபா 1 487 300

● **கீழே தரப்பட்ட வினாக்கள் 16, 17, 18 இற்கு பின்வரும் விபரங்களை உபயோகித்து விடை தரவும்.**

2010 ஆம் நிதி ஆண்டில் கமல் ரேடேர்ஸ் என்ற நிறுவனம் அதன் வியாபார செயற்பாடுகளை கண்டிக்கு விரிவாக்கியது. 2010 ஜனவரி 1 ஆம திகதியிலிருந்து 4 வருடங்களுக்கு ஒரு கட்டடத்தை மாத வாடகை ரூபா 30 000 வீதம் பெற்றுக் கொண்டது. ஆரம்பத்தில் கட்டுப் பணமாக ரூபா 480 000 செலுத்தியதுடன், அதன் பொருட்டு மாத வாடகையில் 1/3 தொகையை கட்டுப்பணத்தின் பொருட்டு கழிவு செய்யப்படும். கட்டட உரிமையாளருக்கு 2010 இல் முடிவடைந்த வருடத்திற்கு ரூபா 200 000 வாடகையின் பொருட்டு கொடுப்பனவு செய்யப்பட்டது. மேலும் கட்டடம் திருத்தம் செய்யப்படுவதால் 2010 ஜனவரி மாத வாடகையை உரிமையாளர் தள்ளுபடி செய்துள்ளார்.

16. 2010 டிசெம்பர் 31 இல் முடிவடையும் வருடத்திற்கான வருமானக் கூற்றில் வாடகையாக கணக்கிடப்படும் தொகையானது

(1) ரூபா 360 000
(2) ரூபா 240 000
(3) ரூபா 200 000
(4) ரூபா 330 000
(5) ரூபா 370 000

17. 2010.09.30 ஆம் திகதியிலிருந்து மாத வாடகையை மட்டும் ரூபா 30 000 இல் இருந்து ரூபா 42 000 ஆக மாற்றம் செய்ய சம்பந்தப்பட்ட பகுதியினர் தீர்மானித்ததாகக் கொள்ளவும். மேற்கூறப்பட்ட மாற்றம் செய்யப்பட்ட பின் ஐந்தொகையில் வாடகை சம்பந்தமாகக் காட்டப்படும் உருப்படிகள்.

| | அட்டுறு வாடகை (ரூபா) | வாடகை கட்டுப்பணம் (நடப்பு அல்லாத பகுதி) (ரூபா) | வாடகை கட்டுப்பணம் (நடப்பு பகுதி) (ரூபா) |
|---|---|---|---|
| (1) | 64 000 | 180 000 | 168 000 |
| (2) | 64 000 | 210 000 | 168 000 |
| (3) | 44 000 | 190 000 | 168 000 |
| (4) | 44 000 | 146 000 | 168 000 |
| (5) | 55 000 | 234 000 | 123 000 |

18. 2010.12.31 இல் அன்று ஆரம்ப கட்டுப்பணக் கணக்கு ரூபா 386 000 ஐ மீதியாக காட்டில் (மேற்படி 17 ஆம் வினாவில் குறிப்பிட்ட மாற்றம் செய்யப்பட்டதிற்கு அமைவாக) ஆரம்ப கட்டுப் பணத்தை கழிவு செய்யும் ஆரம்ப முறை எப்படி மாற்றப்பட்டிருக்கலாம்?

(1) இரு பகுதியினரும் 2010.09.30 இல் இருந்து ஆரம்பக் கட்டுப் பணத்தின் கழிவு வாடகையின் 1/3 இலிருந்து ¼ ஆக மாற்றியது.

(2) இரு பகுதியினரும் 2010.01.01 இல் இருந்து ஆரம்பக் கட்டுப் பணத்தின் கழிவு வாடகையின் 1/3 இலிருந்து ¼ ஆக மாற்றியது.

(3) 2010 டிசெம்பர் 30 இல் உடனடியாக ரூபா 28 000 ஐ கொடுப்பனவு செய்தது.

(4) இரு பகுதியினரும் 2010 ஆம் வருட வாடகை நிலுவையை ஆரம்பக் கட்டுப்பணத்திலிருந்து கழிக்க உடன்பட்டது.

(5) மேற்கூறிய எவையுமல்ல.

19. நிதிக் கூற்றுக்களின் உபயோகம் பற்றிய விவாதத்தின் போது, நிதிக் கூற்றுக்களின் நோக்கங்கள் பற்றி பின்வரும் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டன.

A- தளாண்மையின் நிதி நிலைமை, செயற்திறன் மற்றும் நிதி நிலையில்

**தொடர்ச்சி 12 ஆம் பக்கத்தில்...**

மாற்றங்கள் என்பவையை வழங்குவதே நிதிக் கூற்றுக்களின் நோக்கமாகும்.

B - தெளிவானதும் நம்பகரமானதுமான முறையில் ஊடசெயல்களின் உண்மையான பதிவுகளை வழங்குவதே நிதிக் கூற்றுக்களின் நோக்கமாகும்.

C - நிதிக் கூற்றுக்களை உபயோகிப்பவர்கள் எவருக்கும் தேவைப்படும் எல்லா தகவல்களை வழங்குவதே நிதிக் கூற்றுக்களின் நோக்கமாகும்.

D - ஒப்பீட்டுத் தன்மை, நம்பகத்தன்மை ஆகிய தேவைப்பாடுகளைக் கருத்திற் கொண்டு புத்திசாதுரிய முறையில் தகவல்களை வழங்குவதே நிதிக் கூற்றுக்களின் நோக்கமாகும்.

- (1) கூற்று A
- (2) கூற்றுக்கள் A மற்றும் C
- (3) கூற்றுக்கள் A மற்றும் D
- (4) கூற்றுக்கள் B மற்றும் D
- (5) கூற்று C

20. தருமன் என்பவர் ஒரு தனி வியாபாரி. 2007/2008 நிதியாண்டிற்கான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளது.

மூலதனம் - 2010 ஏப்பிரல் 01 இல் ரூபா 5 300 660
- 2011 மார்ச் 31 இல் ரூபா 7 154 320

வருடத்தில் புகுத்தப்பட்ட மூலதனம் ரூபா 550 000 தனிப்பட்ட பாவனைக்குப் பெறப்பட்ட பொருட்களின் பெறுமதி ரூபா 34 180 வியாபார வங்கிக் கணக்கிலிருந்து தருமனின் வருமான வரிக்காகச் செலுத்தப்பட்டது. ரூபா 50 000.

தருமன் வியாபாரத்திலிருந்து 2010/ 2011 நிதியாண்டில் பெறப்பட்ட இலாபம் / நட்டம் ஆனது.

- (1) ரூபா 1 337 840 இலாபம்
- (2) ரூபா 1 853 660 இலாபம்
- (3) ரூபா 1 387 840 இலாபம்
- (4) ரூபா 1 303 660 இலாபம்
- (5) ரூபா 1 303 670 இலாபம்

21. ஆதவன் விளையாட்டுக் கழகம் அதன் அங்கத்தவர்களிடமிருந்து வருடாந்த அங்கத்துவக் கட்டணமாக ரூபா 15 000 இனை அறவிடுகின்றது. ஆண்டின் ஆரம்பத்தில் 20 அங்கத்தவர்களின் சந்தா நிலுவையில் இருந்தது. ஆண்டின் போது பெறப்பட்ட சந்தாப் பணம் ரூபா 4 500 000 ஆகும். இந்தத் தொகை 15 புதிய அங்கத்தவரிட மிருந்து பெற்ற சந்தாப் பணத்தினையும் சந்தா நிலுவையாக இருந்த 12 அங்கத்தவர்களிடமிருந்து பெற்ற சந்தாப் பணத்தினையும் உள்ளடக்குகின்றது. ஆண்டின் இறுதியில் 18 அங்கத்தவர்களின் சந்தாப் பணம் நிலுவையிலிருந்தது.

கழகம் சந்தா வருமானத்தினை அட்டுறு அடிப்படையில் கணக்கிற் கொள்ளுமேயாகில் ஆண்டுக்கான வருமான செலவினக் கூற்றில் சந்தா வருமானமாக காட்டப்பட வேண்டிய தொகை என்ன?

- (1) ரூபா 4 590 000
- (2) ரூபா 4 365 000
- (3) ரூபா 4 770 000
- 4) ரூபா 4 320 000
- (5) ரூபா 4 56 000

22. சத்தி பங்குடமையின் இலாப, நட்டக் கணக்கினை பகுப்பாய்வு செய்தபோது கீழ் வருவன தெரியவந்தன.

(i) பங்காளர்களால் தமது தனிப்பட்ட தேவைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட ரூபா 100 000 பெறுமதியான பொருட்கள் கணக்கிற் கொள்ளப்படவில்லை.

(ii) பங்காளர் எடுப்பனவு ரூபா 500 000 இலாப நட்டக் கணக்கில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

C = ..........................................................................................

D = ..........................................................................................

E = ..........................................................................................

41. குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு கம்பனியின் மேந்தலைக் கிரயங்கள் வருமாறு.


1. தொழிற்சாலை வாடகை வருடத்திற்கு ரூபா 6 000.

2. சேவையின் கிரயம் அலகுக்கு ரூபா 3. ஆகக் கூடிய வருடக் கட்டணம் ரூபா 6 000.

3.பெறுமானத் தேய்வு அறவீடு. அலகுக்கான கிரயத்தின் அடிப்படையில்.

4. மேற்பார்வையாளர் சம்பளம் :

| | |
|---|---|
| 1 000 இற்கு குறைந்த உற்பத்திக்கு | - ஒரு மேற்பார்வையாளர் |
| 1 001- 1 500 உற்பத்திக்கு | - இரண்டு மேற்பார்வையாளர்கள் |
| 1 501- 2 000 உற்பத்திக்கு | - மூன்று மேற்பார்வையாளர்கள் |




குறிப்பு : OQ குறிப்பது வெளியீடு, OC குறிப்பது கிரயம்.

பொருத்தமான படம்


1. இற்கு ..........................................................................

2. இற்கு ..........................................................................

3. இற்கு ..........................................................................

4. இற்கு ..........................................................................

42. கீழ்வரும் இலாப - அளவு வரைபைப் பயன்படுத்தி இலக்கங்கள் குறிக்கும் சொற்களைக் குறிப்பிடுக.




1. ..........................................................................................

2. ..........................................................................................

3. ..........................................................................................

4. ..........................................................................................

● **43 தொடக்கம் 45 வரையுள்ள கூற்றுக்கள் சரியா அல்லது பிழையா எனக் குறிப்பிடுக.**

43. பொது மக்களுக்கு பொதுப் பங்கு வழங்களுக்கு மேலாக வரையறுத்த பொதுக் கம்பனி பங்கு வழங்கக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. (........................................)

44. நிறுவனத்தின் வங்கிமீதி அதிகரித்தல் இலாபத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றது. (........................................)

45. இலாப நோக்கற்ற அமைப்பின் பிரதான வருமானம் கலை நிகழ்ச்சி வருமான மாகும். (........................................)

● **46 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு தேவையற்றதை வெட்டிவிடுக.**

46. கொள்வனவுத் திரும்பலைக் கொண்டு செல்லும் செலவு. (மூலதனச் செலவு / வருமானச் செலவு)

47. மக்கிறோ கணினியைத் தயாரித்தவர் அதன் தரத்தை உயர்த்தியதால் ஏற்பட்ட செலவு. (மூலதனச் செலவு / வருமானச் செலவு)

48. மறுபடிவிலைமதித்தல் ஞாபன முறையின்படி சொத்துக்கள் புதிய விலை ஐந்தொகையில். (காட்டப்படும் / காட்டப்பட மாட்டாது)

49. இருப்பு மதிப்பீட்டுச் சூத்திரத்திற்கு இலங்கைக் கணக்கீடு நியமம் 5 (SLAS 5) அல்லது (LKAS 2) சிபார்சு செய்வது எளிய சராசரியாகும். (SAM) (சரி / பிழை)


50. தொங்கல் கணக்கு உருவாக்கும் முறை சிறந்த கணக்கீட்டு முறையாகும். (சரி / பிழை)

( முற்றும் )

பொறுப்பாசிரியர்-: S.S.சுஜீவன் (தொ.பே -: 0774799161/0759799161)

# காதல் தோல்வியால்

## உலக சாதனை படைத்த பருமனான மனிதன்!







இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பால் மேசன், பார்ப்பவரைப் பீதிகொள்ளச் செய்யும் பிரம்மாண்ட தோற்றம் கொண்டவர். தனது உடல் எடை காரணமாகவே கின்னஸ் சாதனைப் புத்தகத்திலும் இடம்பெற்றிருக்கின்ற மேசன் தன்னுடைய அசாத்திய எடைக்கு காதல் தோல்விதான் காரணம் என்கிறார்.

தற்போது 50 வயதாகும் மேசன், தனக்கு 21 வயதாக இருந்தபோது தன்னைவிட 18 வயது கூடிய பெண்ணைச் சந்தித்து காதல் கொண்டாராம்.

அவள் பெயர் சாரா! அவளை நான் செல்லாமாக சார் என்றுதான் அழைப்பேன். என் நினைவுகள் முழுவதும் அவளே நிறைந்திருந்தாள். என் வாழ்க்கை முழுவதும் அவள் துணை வருவாள் என்று நான் நம்பினேன் என்கிறார் மேசன்.

''என் காதலிக்கு ஒரு வீடு இருந்தது. நானும் அவளும் அங்கேயே வசித்து வந்தோம். நான் அந்த வீட்டைச் சீரமைக்கப் பண உதவி கூட செய்தேன். ஆனால் அவள் எனது கனவுகள் அனைத்தையும் ஒரு நாள் பொய்யாக்குவாள் என்று கொஞ்சம் கூட நினைக்கவில்லை'' என்று வேதனை தெரிவிக்கிறார், மேசன்.

''1986ஆம் ஆண்டு எனக்கு 26 வயதாக இருக்கும்போது அவளுக்கு இன்னொரு இளைஞனுடன் தொடர்பு இருப்பதாக எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது. சந்தேகத்தை அவளிடம் நேரடியாகக் கேட்கவும் செய்தேன். அவளோ அதற்கு மறுப்பு ஏதும் தெரிவிக்க வில்லை.

அத்துடன் அந்த இளைஞனுடனே திருமண நிச்சயதார்த்தத்தை முடித்துக் கொண்டு போய்விட்டாள்''

அந்தக் காதல் தோல்வியை மறக்கத்தான் கண்டபடி சாப்பிட ஆரம்பித்தாராம் இவர். ''நொறுங்கிப்போன என் இதயத்தை சாந்தப்படுத்த காதல் தோல்வியால் உலகிலேயே பருமனான மனிதன் ஆனார்!

எனக்கு ஒரு வழியும் தெரியவில்லை. இடைவிடாது உணவு உண்பதன் மூலமாகவாவது மனதை அமைதிப்படுத்த முடியுமா என்று நினைத்தேன். அதன் விளைவாக, 24 மணி நேரமும் உணவு உண்ணும் பழக்கத்துக்கு அடிமையானேன்.

எனவே எடை கிடுகிடு வென்று கூடி, உலகிலேயே பருமனான மனிதனாக மாறிவிட்டேன். ஒரு கட்டத்தில் என்னால் நாவைக் கட்டுப்படுத்த முடியவில்லை, எடைக்கும் கடிவாளம் போட முடியவில்லை'' என்கிறார்.

''நான் அந்தக் காலகட்டத்தில் 24 மணி நேரமும் சாப்பிட்டேன் என்றால் உங்களுக்கு நம்புவது கடினமாயிருக்கும்.

ஆனால் அதுதான் உண்மை. இரவு அகால வேளையில் கூட சாப்பிட்டதால் சரியாக தூங்கக் கூட முடியாமல் அவதிப்பட்டேன் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்கிறார் மேசன்.

மேசனின் அசாதாரண எடை காரணமாக அவருக்கு என்று மிகப் பெரிய படுக்கை அறையுடன் புதிதாக ஒரு பங்களாவே கட்ட வேண்டி வந்தது.

மேசனின் அதிக எடை குறித்து எச்சரித்தே வந்த மருத்துவர்கள் ஒரு கட்டத்தில், எடையைக் குறைக்காவிட்டால் அவர் இரண்டு வருடங்களுக்கு மேல் உயிர் வாழ முடியாது என்று ரெட் சிக்னல் காட்டினர்.

அதன் பிறகுதான் ''அலர்ட்'' ஆனார் மேசன். அவர், சாப்பாட்டு விஷயத்தில் ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டு வந்ததுடன், வயிற்றின் அளவைக் குறைப்பதற்காக அறுவைச் சிகிச்சையும் மேற்கொண்டிருக்கிறார்.

முன்பு 980 பவுண்டு எடையுடன் படுக்கை, சக்கர நாற்காலியை விட்டு அகல முடியாது என்ற நிலையில் இருந்த மேசன், தற்போது எழுந்து நடமாடும் அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளார்.

இது தன்னைப் பொறுத்தவரை பெரிய சாதனை என்பது மேசனின் கருத்து.

இந்த எடை குறைப்புக்கு இன்னொரு இனிய பின்னணியும் உண்டு.

இன்னொரு பெண் மீது மேசனின் காதல் பார்வை விழுந்துள்ளது. இந்த ''கனமான ''காதல், காலமெல்லாம் வாழ்க!

# உச்சரிப்பு யாருக்கும் நச்சரிப்பாய் இருக்காது

## பிறை எப் . எம் அறிவிப்பாளர் பிரபாகரன்

அனைவருக்கும் வணக்கம்! நான் உங்கள் நண்பன் பிரபாகரன். பிறை எப்.எம். காற்றலையினூடாக உங்களை சந்திக்கும் நான் இன்று சற்று வித்தியாசமாக உதயசூரியன் வாயிலாக சந்திக்கிறேன்.

என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில் ஏன் கையை ஏந்த வேண்டும் வெளி நாட்டில்? என்பதை பாடலுக்கு மட்டும் பாடிவிட்டுப் போகாமல் அனுபவித்துச் சொல்கின்றேன். என் ஊரில் பிழைக்கத் தெரியாதவன் உலகில் எந்த மூலைக்குச் சென்றாலும் பிழைக்க மாட்டான், அந்தளவுக்கு வாய்ப்புகளை தன்னகத்தே கொண்ட கிழக்கிலங்கையின் அக்கரைப்பற்றின் தெற்கே இருகின்ற ஒரு பச்சைக் கிராமம் தான் கோளாவில். பாசம் தந்து என்னை வேறு எங்கும் பறக்க விடாமல் தடுத்து நிற்கிறது இந்த பாசக்கார மண்.

அம்மா, அப்பா, அண்ணா, அக்கா, நான், தங்கை இதுதான் என் குடும்பம். இப்போது இந்த எண்ணிக்கை நான்கால் அதிகரித்திருக்கிறது.. அத்தான், அண்ணி, அக்காவின் மகள். அண்ணாவின் மகள். இனி இந்த எண்ணிக்கையில் மாற்றம் ஒன்று வரவேண்டும் என்றால் அது என்னால் தான் நடக்க வேண்டும்.

அத்திபாரம் முதல் சாதாரண தரம் வரை க்கும் என்னை கட்டி எழுப்பியது எங்களூர் விநாயகர் மகா வித்தியாலயம்.

பின்னர் உயர்தரத்தில் என்னை உயர த்தில் வைத்து அழகு பார்த்தது அக்கரைப் பற்று முஸ்லிம் மத்திய


எஸ்.ரோஷன்

கல்லூரி. படித்தது விஞ்ஞானப் பிரிவில் என்றாலும் வானொலி மீது கொண்ட அதிக ஈடுபாடு காரணமாக எப்படியாவது வானொலி அறிவிப்பாளராக வேண்டும் என்று கடினமாக முயற்சி செய்தேன். அதன் பயனாக தென்றல் வானொலியில் இரண்டு வருடங்கள். பிறை எப்.எம். இல் 7 வருடங்கள் இப் படியாக வானொலிப் பயணம் தொடர்கிறது.

**பாடசாலை அனுபவம்?**

பாடசாலையில் நான் செய்த சேட்டைகள் நிறையவே இருக்கு. ஆனால், நல்ல பிள்ளை என்ற அந்தப் பெயருக்கு பாதிப்பில்லாமல் அத்தனை சேட்டைகளையும் திரை மறைவில் அரங்கேற்றியிருக்கிறேன்.

ஒரு தடவை 7 ஆம் தரம் படிக்கும் போது பாடசாலை இல்ல விளையாட்டு போட்டியின் பயிற்சிக்கு செல்லாமல் நாங்கள் வேறு இடத்தில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தோம். எங்களைத் தேடி அதிபர் உட்பட அனைத்து ஆசிரியர்களும் நாங்கள் விளையாடிய இடத்துக்கு படையெடுத்தபோது, அவர்கள் கண்ணில் இருந்து தப்ப கிட்டத்தட்ட மூன்று நான்கு மணித்தியாலங்கள் வைக்கோல் போரினுள் மறைந்திருந்தோம்... மறுநாள் பாடசாலைக்கு சென்றால் நிச்சயமாக அடி இருக்கும். அந்த அடியின் தாக்கத்தை குறைக்க இரண்டு காற்சட்டைகள் அணிந்து போனோம். இதைக் கண்டுகொண்ட அதிபர் அதற்கும் சேர்த்து நன்றாக வழங்கினார்.

**யாருடன் இணைந்து நிகழ்ச்சிசெய்யப் பிடிக்கும்?**

ம்... ம்... விளங்குதோ இல்லையோ சிங்கள, ஆங்கில வானொலிகள் உட்பட எல்லா வானொலிகளையும் கேட்பேன். ஹிரு எப்.எம்.இன் காலை நேர நிகழ்ச்சியை தொகுத்து வழங்கும் கேஸ்பரா மற்றும் அரா ஆகியோர் என்னை மிகவும் கவர்ந்தவர்கள். அவர்களோடு நிகழ்ச்சி செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தால் நிச்சயம் செய்வேன்.

**ஒலிபரப்பில் உங்களுக்கென்று ஏதாவது கொள்கைகளை கடைப்பிடித்து வருகிறீர்களா?**

நிச்சயமாக. இதுவரைக்கும் இரட்டை அர்த்தம் பொதிந்த பாடல்களை ஒலிபரப்பவில்லை. அதே போல தமிழ் உச்சரிப்பு யாருக்கும் நச்சரிப்பாய் இல்லாமல் கவனித்து வருகிறேன்.

**போட்டிகள் நிறைந்த இந்தத் துறையில் உங்களின் அடையாளம் என்ன?**

எது எதுவெல்லாம் போட்டிக்குரிய விடயமாக அமைகின்றதோ அதனை மற்றைய போட்டியாளருக்கு முதல் கற்றுக்கொள்வது.

**ரோல் மொடல்?**

வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் நான் சந்திக்கும் ஒவ்வொரு மனிதரிடம் இருந்தும் ஒரு விடயத்தை கற்றுக்கொள்கிறேன். தனியாக யாரையும் ரோல் மொடலாக நினைத்ததில்லை.

**வாழ்வில் மறக்க நினைப்பது?**

எதையுமே மறக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறேன்... ஒவ்வொன்றும் கற்றுத் தந்தவை ஏராளம், கற்றுக்கொண்ட பாடங்கள் என்றும் பயனுள்ளதாக இருக்கும்.

**படித்ததில் பிடித்தது?**

தமிழில் வெளிவந்த ஒரு விஞ்ஞான காவியம் வைரமுத்து அவர்களின் ''தண்ணீர் தேசம்'' ஒரு மெல்லிய காதல் கதையினூடாக கடலின் அத்தனை ஆழத்துக்கும் பயணித்திருக்கின்றார் கவிஞர்.

**மறக்க முடியாத சம்பவம்?**

ஒரு நாள் காலை ஒன்பது மணியிருக்கும். வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் நண்பனை சந்திக்க சென்றுகொண்டிருந்தேன். நான் வருவதை கவனிக்காத மீன் வியாபாரி ஒருவர் பாதையை கடக்க கணப் பொழுதில் அவரின் நிலையை சிந்தித்து, தைரியமாக மோட்டார் சைக்கிளை பாதையைவிட்டு நகர்த்தினேன். எதிர் பார்த்தது போலவே... எனக்கும் நிறையக் காயங்கள். சம அளவில் மோட்டார் சைக்கிளுக்கும் சேதம். இதில் என்ன ஜோக் என்றால், இத்தனையும் நடந்து முடிந்த பிறகும் அந்த நபருக்கு அங்கு என்ன நடந்தது என்பதே தெரியாது. அவரும் மற்றவைகளைப் போல என்னை பரிதாபமாக பார்த்துவிட்டு நகர்ந்தார். காலில் இருக்கும் தழும்புகளை பார்க்கும் போது அந்த சம்பவம் தான் அடிக்கடி ஞாபகத்துக்கு வரும்.

**சந்திக்க விரும்பும் நபர் யார்?**

அவர்களில் யாரும் இப்பொழுது உயிருடன் இல்லை. இப்போதைக்கு உயிருடன் இருப்பவர்களில் யாரையும் சந்திக்கும் எண்ணம் வரவில்லை. வந்தால் சொல்கிறேன்.

**உங்களுடைய (பிளஸ்,மைனஸ்) என்ன?**

பிளஸ் எதையும் நேர்த்தியாக செய்து முடிக்கலாம் என்ற நம்பிக்கை. மைனஸ் இதுவரைக்கும் என்னால் அடையாளம் காண முடியவில்லை. (நமது எதிராளிகளை எதிர்கொள்ள நமது பலத்தைக் காட்ட வேண்டும் என்றில்லை, நமது பலவீனத்தை காட்டாமல் இருந்தாலே வெற்றி தான்.)

**வேறு அறிவிப்பாளர்களிடம் கண்ட திறமைகள்?**

நிறையவே இருக்கின்றன. நிறைய நண்பர்களின் திறமையைக் கண்டு வியந்திருக்கிறேன். இப்பொழுது பட்டியல் இட்டால் பயந்து போவீர்கள். ஒன்று மட்டும் சொல்கிறேன் பிக் எப்.எம். தொகுப்பாளர் பாலாஜின் நகைச்சுவை கலந்த வேகமாக கதை சொல்லும் பாங்கு என்னை வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது.

**நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கும் போது நடந்த சுவாரஷ்யமான அனுபவம்.**

நாங்கள் தென்றல் வானொலியில் இணைந்த காலத்தில் நடந்த சம்பவம் இது. பொதுவாக வானொலிகளில் பயிற்சி அறிவிப்பாளர்களை அதிகமான நேயர்கள் நிகழ்ச்சிகளை செவிமடுக்காத நேரங்களில் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பு செய்ய அனுமதிப்பார்கள். அப்படித்தான் எனக்கும் ஒரு பின்னிரவு நேர நிகழ்ச்சி கிடைத்தது. ஒரு மாதிரியாக நிகழ்ச்சியை முடிக்கும் நேரம் அதிகாலை 4.50 இருக்கும். அடுத்து கடமை நேரத்துக்கு வருகை தந்த கவிதா யாழினி அமலதாஸ் கலையகத்தின் மறு புறத்திலிருந்து சிரித்துக்கொண்டே உள்ளே வருவதை அவதானித்தேன். பின்னர் தான் விசயமே புரிந்தது அதற்கு முன் நான் செய்த அறிவிப்பு ஒலிவாங்கியை ''ஒன்'' செய்யாமல் செய்திருக்கிறேன் என்று.

**வாழ்க்கை கற்று தந்தது?**

வலி இல்லாமல் வாழ்க்கை இல்லை! வலி போக்கும் வழி தெரிந்தவனே வாழ்க்கையில் வளம் பெறுகின்றான் என்பதையும், எதிர்பார்ப்புகள் இல்லை என்றால் ஏமாற்றங்கள் இல்லை என்பதையும் கற்றுத் தந்திருக்கிறது.

**நன்றி சொல்ல ஆசைப்படுவது?**

பெயர்களை சொல்லவில்லை என்பதற்காய் என்னோடு பகைத்துகொள்ளமாட்டர்கள் என் நண்பர்கள். மொத்தமாகச் சொல்கிறேன் என் வாழ்க்கையில் ஏணியாகவும், ஒலிபரப்பு என்னும் கடலில் பயணிக்க எனக்கு தோணியாகவும் இருக்கும் அனைவருக்கும் நன்றிகள்.

# போட்டி அரசியலில் பலிக்கடாவாகும் பாடசாலைகள்!!

பதுளையில் நடப்பது அரசியல் போட்டியா? இல்லை அராஜகமா? என்று விமர்சிக்கும் அளவிற்கு அண்மைக்காலமாக முகம் சுளிக்க வைக்கும் அரசியல் செயற்பாடுகள் பதுளையில் அரங்கேறி வருகின்றன. மக்கள் சேவையில், கெபினட் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் கூட இவ்வளவு முரண்பாடுகள் இருக்காது எனக் (கேலியாகக்) கூறுமளவிற்கு பதுளையில் செந்தில் தொண்டமான் வடிவேல் சுரேஸ் முரண்பாடுகள் வலுப்பெற்று வருகின்றன.

ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமானுக்கும் பசறைத் தொகுதி அமைப்பாளரும் ஊவா தமிழ் கல்விக்குப் பொறுப்பான (?) வடிவேல் சுரேஸுக்கும் இடையிலான மனக்கசப்பு முரண்பாடுகள் தொடர்பாக பலரும் முகம் சுளிக்கின்றனர். இருப்பினும் இவர்களின் அபிவிருத்திக்கான உரிமைப் போட்டியும் முரண்பாடுகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றதே ஒழிய குறைந்தபாடில்லை. இவர்களின் செயற்பாடுகளால் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மற்றும் பொதுமக்களே பெரும் அசௌகரியங்களைச் சந்தித்து வருவதை கோடிட்டுக் காட்ட விரும்புகின்றோம்.

குறிப்பாக இத்தலைவர்களின் அரசியல் சேவைகளில், மக்கள் அபிவிருத்திகளில் பாடசாலைச் சமூகம் பெரும் அசௌகரியங்களை சந்திக்கின்றது என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

மக்கள் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டு அமைச்சு ஆசனத்தை அலங்கரிக்கும் ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமானையும் பசறைத் தொகுதி அமைப்பாளரும் ஊவா தமிழ் கல்விக்குப் பொறுப்பானவருமான வடிவேல் சுரேஸையும் பகைத்துக் கொள்ள முடியாமல் ஊவா பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் திரிசங்கு நிலையில் இருப்பது பட்டவர்த்தனமான உண்மையே.

ஊவாகல்வியமைச்சரான முதலமைச்சர் சஷிந்திர ராஜபக்ஷ தமிழ் பாடசாலை அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும் நிதிக்கும், அபிவிருத்திக்கும் பசறை அமைப்பாளர் மற்றும் தமிழ் கல்விக்குப் பொறுப்பானவர் என்ற ரீதியில் நானே உரித்துடையவன் என வடிவேல் சுரேஸ் பாடசாலைகளில் மூக்கை நுழைப்பதும் அரசாங்கத்தில் இருப்பதுடன் ஊவா அமைச்சர் நான் தான் எமது வேண்டுகோளுக்கிணங்கவே இந்த அபிவிருத்தி கிடைத்தது என செந்தில் தொண்டமான் கால் நுழைப்பதும் இன்று ஊவா மாகாண பாடசாலைகளில் வாடிக்கையான செயற்பாடாகிவிட்டது.

இவ்வாறு ஆளுக்கொரு காரணத்தை கூறிக்கொண்டு இருவரும் பாடசாலைகளில் நுழைவதால் அரசியல் பழிவாங்கல்களையும், வன்மத்தையும் தவிர்த்துக் கொள்வதற்காக அதிபர்கள் நெகிழ்வுப் போக்கைக் கடைபிடிப்பது யதார்த்தமாகிவிட்டது.

இந்த அதிபர்களின் நெகிழ்வுப் போக்கை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் இத்தலைவர்கள் ஒரு அபிவிருத்தித் திட்டத்தை இருமுறை திறந்துவைப்பதும், தம்மால்தான் இத்திட்டம் திறந்துவைக்கப்பட்டது என குடுமிப்பிடி சண்டைபோடுவதும் கடந்த காலங்களில் நாம் கண்கூடாகக் கண்ட அரசியல் செயற்பாடுகள்.

தமது சுய அரசியலை வளர்த்துக் கொள்வதற்காக பாடசாலைகளை பகடைக் காய்களாக்குகின்றனர் என அதிபர்கள் விமர்சிப்பதில் நியாயம் இருக்கத்தான் செய்கின்றது.

ஊவா மாகாண முதலமைச்சரும் கல்வியமைச்சருமான சஷிந்திர ராஜபக்ஷவால் ஒதுக்கப்பட்ட நிதியிலேயே கோணக்கலை தமிழ் வித்தியாலய கட்டிடம் சீரமைப்புச் செய்யப்பட்டது. சீரமைப்பின்பின் அக்கட்டிடத்தை திறந்து வைப்பதற்காக திகதி நிர்ணயிக்கப்பட்டு அதிதியாக ஊவா அமைச்சர் செந்தில் தொண்டமானும் பெயரிடப்பட்டிருந்தார். கட்டிடத் திறப்புவிழா நாளுக்கு முன்தினம் அப்பாடசாலைக்கு வருகை தந்த வடிவேல் சுரேஸ் அக்கட்டடத்தை திறந்து வைத்துவிட்டு சென்றுவிட்டார். பின் திகதி நிர்ணயிக்கப்பட்டது போல் செந்தில் தொண்டமானால் மீண்டும் அக்கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. இச் சம்பவத்தை மீண்டும் நினைவூட்ட காரணமிருக்கிறது. இத்தலைவர்களின் செயற்பாடுகளால் இருநாள் பாடசாலையில் கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கும் என்பதோடு சுயாதீனமாக பாடசாலையை நடாத்த முடியாமல் அதிபர்கள் அசௌகரியப்பட காரணமாக அமைந்திருக்கும் என்பதற்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

அரசியல்வாதிகள் தமது அரசியல் பழிவாங்கல்களுக்காக பாடசாலையை பலிக்கடாவாக்குகின்றனர் என பதுளை பிரதேச அதிபர் ஒருவர் நொந்துபோய்க் கூறியிருந்தார். இவருடைய கருத்துக்களை செந்தில் தொண்டமானும், வடிவேல் சுரேஸும் யதார்த்தமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு அரசியல் பயன்படுத்தப்படலாமே தவிர பாடசாலையை வைத்து தமது சுய அரசியலை மேற்கொள்வதை எந்த வகையிலும் ஏற்று க்கொள்ளமுடியாது. இது நாகரீகமான அரசியலாகவும் இருக்காது.


இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்து நீடிக்குமாயின் வரவிருக்கும் தேர்தல் சவாலானதாகவே இருக்கும். இந்த போட்டி அரசியலுக்கு இனியாவது முற்றுப்புள்ளி வைத்து மக்கள் சார்பான நாகரீக அரசியல் பக்கம் தலைவர்கள் திரும்பவேண்டும் என்பதே அதிபர், ஆசிரியர், புத்திஜீவிகள் அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

எம்.நாசன்.





# சவூதியில் மரணமான பணிப்பெண்!



நினைத்துப் பார்க்க முடியாத சித்திரவதைகள், கொடூர தண்டனைகள், ஈவு இரக்கமற்ற நடத்தைகள் என சவூதி எஜமானர்கள் பற்றி அண்மைக் காலமாக அதிகமாகவே கேள்விப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

வெளிநாட்டுக்குப் பணிப்பெண்களை அனுப்புவதற்காக முகவர்கள் செய்யும் தில்லுமுல்லுகள் ஏராளம். பின்விளைவுகள் பற்றி சிந்திக்காது பணிப்பெண்களும் அவர்களது குடும்பத்தினரும் இவற்றுக்கு இசைகின்றனர்.

இவ்வாறானவர்கள் அங்கே பாதிக்கப்படும் போதுதான் பிரச்சினைகள் பூதாகாரமாகப் புரிகின்றன. இவர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்தல், அங்கே உயிரிழந்தால் சடலத்தை பெற்றுக்கொள்ளல் மட்டுமன்றி சட்டரீதியான கொடுப்பனவுகளைக் கூட பெற்றுக்கொள்ள முடியாது போகிறது.

ஹாலி-எல, மொரகொல்ல தோட்டத்தைச் சேர்ந்த பிரபாகரன் சசிகலா என்ற பெண்ணுக்கு நேர்ந்த நிலையும் இதுதான்.

சவூதிக்கு பணிப்பெண்ணாக சென்ற சசிகலா கடந்த பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி திடீர் மரணமடைந்தார். சசிகலா இறக்கும் போது அவருக்கு வயது 33.

இவர் 3 பிள்ளைகளின் தாய் ஆவார். கணவருடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக பிள்ளைகள் மூவரையும் தனது பெற்றோரின் பராமரிப்பில் விட்டு விட்டு சசிகலா வெளிநாடு சென்றார்.

ஏற்கனவே ஒரு முறை வெளிநாடு சென்று வந்த சசிகலா இறுதியாக பதுளையிலுள்ள இடைத்தரகர் ஒருவரின் ஊடாக கொழும்பிலுள்ள தனியார் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையத்தை அணுகி பணிப்பெண்ணாக ரியாத் சென்றுள்ளார்.

இவர் எம்முகவரின் ஊடாக வெளிநாடு சென்றார் என்ற விபரங்கள் எதுவும் குடும்பத்தினருக்குத் தெரிந்திருக்கவில்லை என அவரது சகோதரி சந்திரகலா கூறுகின்றார்.

அவர் மேலும் கூறுகையில்:-

அக்கா மரணமாவதற்கு முதல் நாள் என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு, நான் இங்கு பெரிய பிரச்சினையில் உள்ளேன். உண்ண உணவு கூட சரியாகக் கிடைப்பதில்லை. முக்கியமான விடயம் ஒன்று பேசவேண்டியிருப்பதால் நாளை என்னுடன் கட்டாயம் பேசுங்கள் என்று கூறினார்.

மறுநாள் (22 ஆம் திகதி) அக்கா வேலை செய்த வீட்டிற்கு தொலைபேசி அழைப்பை பலமுறை ஏற்படுத்தியும் அவர்கள் என்னுடன் பேச வில்லை. நீண்ட நேரத்திற்கு பின்னர் என் அக்கா திடீரென இறந்துவிட்டதாக எங்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இச்செய்தி கேட்டு நாங்கள் பேரதிர்ச்சிக்குள்ளாகினோம்.

அக்காவின் மரணம் தொடர்பில் சந்தேகம் நிலவினாலும் அவரது உடலை இங்கு கொண்டுவர முயற்சிகளை மேற்கொண்டோம். வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் தொடர்பான அமைச்சர் டிலான் பெரேராவின் உதவியுடன் ஆரம்பத்தில் கொழும்பு சென்று வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் மூலமாக ரியாத்திலுள்ள இலங்கைத் தூதுவராலயத்துடன் தொடர்புகளை மேற்கொள்ள முனைந் தோம். அக்காவை வெளிநாட்டுக்கு அனுப்பிய முகவர் நிலையத்தை அறிந்து கொள்வதில் பலத்த சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

இறுதியில் அக்காவின் கடவுச் சீட்டை வைத்து முகவர் நிலையத்தை அடையாளம் காணமுடிந்தது. எனினும் இறுதிவரை அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்த முடியவில்லை. இடைத்தரகரையும் கண்டுபிடிக்க முடியவில்லை. அக்காவின் இறந்த உடலை பெற்றுக் கொள்ள தாமதம் நிலவிய நிலையில் நானும் எனது தாயாரும் ஊவா மாகாண சபை உறுப்பினர் அரவிந்தகுமாரை சந்தித்து பிரச்சினையை எடுத்துக் கூறினோம். அவர் எனது அக்காவின் சடலத்தை விரைவில் பெற்றுக் கொள்ள உதவினார் என்றார்.

சசிகலாவின் உடல் கடந்த 16 ஆம் திகதி சனிக்கிழமை ஹாலி-எல மொறகொல்லயில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

சசிகலா அங்கு திடீரென மரணமடைந்த போதும் அவருக்கு எவ்வித நட்டஈடுகளும் வழங்கப்படவில்லை என அவரது குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து சசிகலாவின் சகோதரர் ஜெயசந்திரன் தெரிவிக்கையில்:-

அக்காவின் கடவுச்சீட்டில் அக்காவின் புகைப்படம் மாற்றப்பட்டுள்ளது. அவர் முஸ்லிம் பெண்ணைப் போல உடை அணிந்து காணப்படுகிறார். பணி செய்த வீட்டிலும் ஆசினா என்றே அழைக்கப்பட்டுள்ளார்.

## நட்டஈட்டை பெறுவதில் சிக்கல்!

இதன் காரணமாகவே வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தினால் சரியான தகவலை வழங்கமுடியவில்லை. பின்னர் நாம் காட்டிய கடவுச்சீட்டை வைத்தே தகவல்கள் பெறப்பட்டு சடலத்தைக் கொண்டு வர ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

எனது அக்கா மாரடைப்பில் மரணமானதாகவே சட்ட வைத்தியரின் பிரேத பரிசோதனை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் வேலைக்கு அனுப்பிய முகவரைத் தொடர்புகொள்ள முடியாதிருப்பதாலும் அவரின் தொழிலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் காணப்படும் சிக்கல்கள் காரணமாகவும் மரணத்திற்கான இழப்பீட்டை பெறுவதில் சிக்கல் நிலைமை தோன்றியுள்ளதாகக் கூறப்படுகிறது என்றார்.

இந்நிலையில் இறந்தவரின் காப்புறுதிப் பணம் மட்டுமே கணவனுக்கும், பிள்ளைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக அறியமுடிகின்றது. பிள்ளைகள் மூவரும் சசிகலாவின் பெற்றோருடனேயே இருக்க விருப்பம் தெரிவித்துள்ளனர். பிள்ளைகளின் கல்வி, எதிர்காலம் என்பவை இனி சவால் மிக்கதாகவே மாறப்போகின்றது.

சசிகலாவின் மரணத்திற்கான இழப்பீட்டை பணிசெய்த வீட்டாரிடமிருந்து பெற்றுக்கொடுக்க அரசியல் பிரமுகர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு பயணங்களில் சரியான விதிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்பதற்கு சசிகலாவின் திடீர் மரணமும் நமக்கு சான்றாகின்றது.

**ஹாலி-எல நிருபர்**

## தூது



என் இதயத்தில்
உன்னை
சிறையாக்கினேன்
கண்களுக்குள்
உன்னை
படமாக்கினேன்
உன்னை நேசிக்கின்றேன்
காலமெல்லாம் சுவாசிக்கத்தான்
நித்தமும் என்
கவிதையை தூது விடுகிறேன்
உன் காதுகளுக்கு கண்களுக்கு
எட்ட வில்லையா
எட்டாத தூரத்தில்
நீ இருந்தாலும் விடுகிறேன் தூது

ஏ.எப்.சஹானா,நிந்தவூர்-09.

## காதல்

உணர்வின்
உந்துதல்!
உதிரத்தின்
உத்வேகம்



எண்ணத்தின்
வெளிப்பாடு!
வாலிபத்தின்
கோளாறு

தசைகளின்
குடைச்சல்
நரம்புகளின்
மெல்லிசை



வயதின்
மூர்க்கம்
காமத்தின்!
கண்விழிப்பு

எல்லாமே
ஒன்றிணைந்த!
மகத்தான
கூட்டமைப்பு
"காதல்"



கூட்டமைப்பு
கலைந்து விடின்!
பரிமுன் பனிபோல
காதலும்
மறைந்துவிடும்.

"கற்பிட்டி வஹாப்"

## முகப்பரு...


உன் முகத்தைப்
பார்க்க
வந்திருக்கின்றன
நட்சத்திரங்கள்...

## முதல் சந்திப்பு

எங்கிருந்தோ வந்தோம்
இன்பமாய் பழகினோம்
துன்பமாய்
பிரிந்தோம்
மீண்டும்
எப்போது
சந்திப்போம் என்
உயிர் நண்பனே!

ஆர்.தனுசன்,
கொஸ்லாந்தை.





## தயாராகுங்கள் சகோதரிகளே!

தாய்க் குலத்தின்
பிறந்த நாள்!
பத்திரிகைகளில்
பலரின் அறிக்கைகள்
அலங்கரிக்கும் கவிதைகள் பல
கண் சிமிட்டும்
வானொலிகள்
வாய் கிழியக்கத்தும்
தொலைக்காட்சிகளின்
தொண்டை கிழிந்து போகும்
பெண்ணுரிமை
பெண்ணியம்
பெண்ணின் பெருமை கூறி
அரசியல்வாதிகள்
அரசியல் போர் தொடுப்பார்கள்
வானில்
வார்த்தைகள் வெடித்து சிதறும்
நாளை பழைய பல்லவியில்
பாடல் ஒலிக்கும்!
வருடம் தோறும்
வந்து மறையும்
வீர வசனம்
விளையும் நாள் என்பதால்
அலட்டிக்கொள்ள வேண்டாம்
சகோதரிகளே!
நீங்கள் நடைமுறையில்
நிகழ்த்திக் காட்டுங்கள்
ஆண்களுக்கு புரியட்டும்
பெண்ணுரிமை பற்றி
வழிக்கு வந்ததெல்லாம்
துணை என்று
வாழ்ந்த காலத்தை புதைத்து
அதில் விதையுங்கள்
மன வலிமையை!
வளைத்து பிடியுங்கள்
வாழ் நாள் முழுவதும்
சமவுரிமையை!
உங்களால் முடியும்
உரிமையை மட்டுமல்ல....
அகிலத்தையும்
அடக்கியாள....!
புறப்படுங்கள்
பூக்களே.... பூக்களாக அல்ல
புயல்களாக!
உண்மையில் பெண்மை
மதிக்கும்
ஆண்கள் கை கொடுப்பார்கள்
களத்தில் குதியுங்கள்
அடுத்த வருடமாவது
அகிலம் அதிரும் மகளிர் தினம்
மலரட்டும்
அது(அதை) ஈழப்பெண்கள்,
இனாமாய் ஒப்படைத்ததென்று
உலகம் முணுமுணுக்கட்டும்,
வரலாறு வழிமொழியட்டும்
வழுக்கி விழுந்த பெண்களை
தூக்கி விட்டவர்கள் என்று!

ஏ.பாரிஸ், மகிந்தலை.

## ஆனால் இன்று நீ?



சின்னக் குழந்தையைப்
போல்
என் கரம் கோர்த்து
விளையாடினாய்
ஓர் நொடி நான்
தாமதித்து விட்டாலும்
வகுப்பிலே
உறைந்துபோய்
அமர்ந்திருந்தாய்!
ஆனால் இன்று நீ
உனக்கென ஓர் துன்பம்
வந்தாலும்
இன்பம் வந்தாலும்
அதை என்னிடம் தானடி
கொட்டித்தீர்த்தாய்
ஆனால் இன்று நீ?
உன் துன்பங்களை
அல்ல இன்பங்களைக்
கூட கொட்டித்தீர்க்க
தகுதி அற்றவளாய் நான்
என் குறும்புகளை கண்டு
என் மீது
அன்பு கொண்டவளே!
இன்று யார் யாரோ
ஏதேதோ
சொல்கின்றார்கள் என்று
உடலால் என்னை
சேர்ந்திருப்பது போல்
இருந்தாலும்
உன் உள்ளத்தால்
என்னை பிரிய
நினைப்பது சரியா?
நீ ஆணாகப்
பிறந்திருந்தால்
உன்னையே நான்
காதல் செய்திருப்பேன்
என்று
சொன்னாயே!
ஆனால் இன்று நம்
நட்பில் கூட அந்த
ஆழம் இல்லாமல்
போனது ஏனடி!

பா.கார்த்திகா,ஹட்டன்.

## என் காதல்

என் கவிதைகளும்,
உணர்வுகளுமாவது
உன் காற்றில் சேரட்டும்- அந்த
சுவாசத்திலாவது நான்
உன்னுடன் இருப்பேன்
அந்த நினைவுகளோடு நான்
காற்றில் கலப்பேன் -அதை நீயும்
சுவாசித்துப்பார் என்
காதல் புரியும்

க. சுபதர்ஷனா,நாவலப்பிட்டி.

## பிடிக்கும்

சில பத்திரிகைகளினால் என்
கவிதைகள் நிராகரிக்கப்படும் போது
ஏற்படும் வலியை விட - உன்னால்
என் காதல் நிராகரிக்கப்படும் போது
அதிக வலிகளை உணர்கின்றேன்
காரணம் படிக்கப்பட்ட பின் தான்
என் கவிதைகள்
நிராகரிக்கப்படுகின்றன ஆனால்
என் காதலோ!
உன்னால் படிக்கப்படாமலே
நிராகரிக்கப்படுகின்றது.
நீ ஒருமுறை படித்துப்பார்
உன்னை விட
என்னை உனக்கு அதிகம் பிடிக்கும்

கே. கிருஷ்ண ராஜ்,ஸ்டேலிங்.



## காத்திருப்பு

என்னவளே!
சொல்லி விட்டு சென்றால்
சம்மதிக்க மாட்டேன் என்றா
சொல்லாமல் சென்றாய்
சொந்தங்கள் ஏதும் இல்லை
எனினும்
இயற்கையை
தூது விட எண்ணினேன்
உன் தூரம் தெரியவில்லை
என்ன பிடிக்கும் என்றாய்
என்னில்
உன் பிரிவை தவிர அத்தனையும்
பிடிக்குமடா ப்ரியமானவனே!
புரிகின்றது நீ சென்ற காரணம்
ஏற்க மறுக்கின்றது மனம்
நீ இல்லா நாட்கள் விடிய
மறுக்கின்றன
விரைந்து வந்து விடு
உன்னவள் கண்ணீருடன்
காத்திருக்கின்றாள்

ஜீ.துர்க்கா, வவுனியா.

## எனது ஊர்

தொழில் தந்த எழிலூர்கனவரெல்ல ஊரடா!
கலகலக்குது பாரடா!
மாந்தர்கள் மனதிலே மகிழ்ச்சி பொங்குதடா!
ஆறு டிவிசனடா ஆறுதல் அடையுதடா!
விவசாயம் செழிக்குதடா!
வீறுநடைபோடுதடா!
பசு வளர்ப்பதிலே பாதி வாழ்க்கை ஓடுதடா!
நமுனுகுல மலைத்தொடரடா!
நடுமத்தியிலே கனவரெல்லடா!
பார்த்து இரசிப்பதற்கு பசுமையான
தேயிலையடா!
98 இல் தொழிலுக்கு சென்றேனடா!
சுவாரஸ்யமாய் சேவை செய்கிறேனடா!
தேயிலை தொழிற்சாலையடா!
சிறப்புடன் இயங்குதடா!
கவிதை பார்த்த மக்களுக்கு
களிப்பு பெறுகுமடா!
வாழ்க கனவரெல்லடா வளமிக்க ஊரடா!
உதயசூரிய நாழிதலடா
தினந்தோறும் உதிக்கனுமடா!

பி.கனகராஜா காவத்தை பசறை.

## நட்பு

நட்பு எனும் கடலைத் தாண்ட
ஒரு நண்பன் தேவை அந்த
நண்பனே நீ தான்
அது தான் நட்பு

எம்.எப். அஹ்மத், காவத்தை.

## தோழி


என்னுயிர் தோழியே...!
பூக்களிடம் ஏனடி
பூசலை உண்டாக்குகிறாய்...!
உன் கூந்தலில் அமர....
இரு பூக்களுக்குள்
இனக் கலவரமாமே...?

க
வி
தை
க
ள்

உதய சூரியன் "கவிதைச்சாரா"
ஏசியன் மீடியா பப்ளிகேஷன்
இல. 68, எலிஹௌஸ் வீதி, கொழும்பு 15.
பெயர்:-------------------
முகவரி:-------------------
தொலைபேசி இல-------------------

# நினைத்ததை முடிப்பவன்! 40

பாலா.சங்குப்பிள்ளை



இன்ஸ்பெக்டர் அறிவழகன் பொலிஸ் காரியாலயத்தில் சிந்தனை வயப்பட்டவராக உட்கார்ந்திருந்தார். எதிரே வில்லவன் அவரையே பார்த்துக்கொண்டிருந்தான்.

"மிஸ்டர் வில்லவன் - நீங்க சொல்லுறதை நம்பவும் முடியலை - நம்பாமல் இருக்கவும் முடியலை. எனக்கு ஒரே குழப்பமாயிருக்குது...."

"நீங்க ரொம்ப நேர்மையானவர், நல்லவர்ன்னு கேள்விப்பட்டேன்... அதனாலதான் உங்களைத் தேடி வந்தேன். நான் சொல்லுற சில விடயங்கள் உங்களுக்கு அதிர்ச்சியாயிருக்கலாம். ஆனா அதுதான் உண்மை."

"சரி இதுக்கெல்லாம் என்னதான் ஆதாரம் வச்சிருக்கீங்க. ஏன்னா... இது பெரிய இடத்து விஷயம். கொஞ்சம் தவறினா என்னோட வேலைக்கே வினை வரலாம்."

"இல்லையில்லை, எல்லாவிதமான ஆதாரமும் என்கிட்ட இருக்குது. சரியா நாம நடவடிக்கையெடுத்தா நிச்சயமா குறி தப்பாது...."

"சரி, சரி.... தைரியமா, துணிச்சலா நான் இதுல என்னோட முழு கவனத்தையும் செலுத்துறேன். எனக்கு இன்னும் சில சந்தேகங்கள் இருக்கு. வைத்தியலிங்கம், அதிபர் அருணாசலம், அண்ணாமலை, வேலுமணி, கண்ணன், அன்புமணின்னு பலபேர் சமீபகாலமா மரணமடைஞ்சிருக்காங்க.... எல்லோருமே ஒரே மாதிரி செத்திருக்காங்க. ஆனா, சரியா எதையும் உறுதிப்படுத்த முடியலை. ஏதோ ஒரு தொடர்பு ஒவ்வொருத்தரோட சாவிலும் இருக்குது. எல்லோருடைய மரண அறிக்கையையும் பொறுமையா வாசிச்சப்பதான் எனக்கு இது புலப்பட்டிச்சி.... இது பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?"

"எனக்குத் தெரியுமான்னு கேட்கிறதைவிட இந்த விடயத்துக்கும் நான் இப்ப உங்கக்கிட்ட குடுத்திருக்கிற விடயத்துக்கும் நிச்சயமா தொடர்பு இருக்கு. மலையக மண் முன்ன புனிதமா இருந்திச்சி. ஆனா எப்ப இந்த வீணாப்போன சில அரசியல்வாதிங்க கால் வச்சாங்களோ அப்பவே அழிவு ஆரம்பிச்சிடுச்சி. உயிர் மலையகத்துக்கு உடல் மண்ணுக்குன்னு சொல்லிக்கிட்டு அரசியல் பண்ண வந்தவங்க, அராஜகம் பண்ணுறாங்க. அரசாங்கம் அள்ளிக் குடுக்கிறதை சும்மா கிள்ளிக் குடுத்துட்டு சுகபோகத்துல துள்ளிக் குதிக்கிறாங்க. கட்சின்னு பாமர மக்கள் விசுவாசம் வைக்கிறாங்க. உயிரையும் குடுக்க முன்வாறாங்க. ஆனா அவங்களை மிதிச்சி மேலே வாற எட்டப்பர்கள் சொத்து சேர்த்து எட்டாத உயரத்துக்கு போறாங்க. இந்த நிலைமை மாறணும்னா நம்ம சமூகத்துல அரசியல் விழிப்புணர்வு ஏற்படணும். அதுவரைக்கும் ஏற்றமும் இல்லை எழுச்சியும் இல்லை...."

அறிவழகன் - வியப்புடன் அவனைப் பார்த்தான்.

"உங்களை மாதிரி சமூக அக்கறையுள்ள நல்ல இளைஞர்கள்தான் இப்ப தேவை. நானும் ஒரு தோட்டத் தொழிலாளியோட மகன்தான். நம்ம சமூகத்துக்கு ஏதாவது செய்யணும்னுதான் இந்தத் தொழிலை தேர்ந்தெடுத்தேன். எனக்கு இன்னொரு மனத் தாங்கலும் இருக்கு. நம்ம தோட்டத் தொழிலாளிங்களுக்கு கிடைக்கவேண்டிய பல்கலைக்கழக அனுமதியிலயும் வசதியானவங்க கைவைக்கிறாங்க. பெரிய பெரிய டொக்டர்ஸ், வக்கீல், வியாபாரிங்களோட பிள்ளைங்க பணத்தை செலவழிச்சி எங்களோட பிள்ளைகள் வயித்துல அடிக்கிறாங்க... இதையெல்லாம் தட்டிக்கேட்க யாருக்கும் நேரமில்லை."

"நீங்க சொல்றது சரிதான். முதல்ல இப்படியானவங்களை களையெடுக்கிறதுக்கு முன் இதுக்கு இடம் குடுக்கிறவங்களை ஒழிக்கணும். அரசியல் புரட்சியொன்னு வந்தாதான் இதெல்லாம் சாத்தியம். அதுவரைக்கும் எதுவும் சாத்தியமில்லை."

"ஓகே மிஸ்டர் வில்லவன். அன்பு மணியோட பிரேதத்தை மறுபடியும் தோண்டி ரெண்டாவது முறையும் பிரேத பரிசோதனை செய்யவேண்டியிருக்கு. இனி நாம அடிக்கடி சந்திக்கலாம்."

கண்ணுசாமி பேயறைந்தவனைப் போல தன்னுடைய மாளிகையின் பிரத்தியேக அறையில் மல்லாந்து படுத்திருந்தான். அப்போது கைபேசி அலறியது.

"ஹலோ நான் மகேஷ்வரி பேசுறேன்....?"

"எந்த மகேஷ்வரி....?"

"என்ன அதுக்குள்ள மறந்து போயிடுச்சா.... நான் பாட்டுக்கு கச்சேரியில வேலை செஞ்சிக்கிட்டிருந்தேன். அந்தப் பக்கமா வந்த நீங்க எப்புடியோ உங்களோட காரியாலயத்துக்கு என்னைத் தூக்கிப் போட்டிங்க. அப்புறம் அதையிதை சொல்லி கட்டில்ல போட்டிங்க.... இப்ப நான் தொட்டில் போடவேண்டிய நிலைக்கு வந்துட்டேன். ஆனா, உங்க பாட்டுக்கு இருக்கீங்க. யாரோ நினைத்ததை முடிப்பவன்னுற பேர்ல உங்கள மாதிரி ஆட்டம் போடுறவங்களோட கொட்டத்தை அடக்குறாங்களாம். எனக்கு ஒரு சரியான முடிவை சொல்லாட்டி அப்புறம் எனக்கு வேற வழியில்லை."

"ஏய்... நானே... அவன்கிட்டயிருந்து வந்த துண்டுச்சீட்டைப் பார்த்து ஆடிப்போயிருக்கேன். நீ வேற கைபேசியில கரைச்சல் குடுக்குறே.... இப்ப உனக்கு என்ன வேணும்...?"

"பேரன், பேத்தியெடுக்க வேண்டிய வயசுல இருக்கிற நீங்க, பேத்தி மாதிரி வயசுலயிருக்கிற என் வாழ்க்கையை நாசமாக்கிட்டிங்க. அதுக்கு நஷ்ட ஈடு வேணும்...."

"சரி.... சரி... எவ்வளவு வேணும்.... சொல்லித் தொலை...."

"பெருசா தேவையில்லை. நுவரெலியாவுல இருக்கிற மூணு பங்களாவுல ஒண்ணை எனக்கு எழுதித் தரணும். பேங்கில பத்துலட்சம் போடணும். பேங்கில வேலை மாத்தித் தரணும்..... அவ்வளவுதான்...."

"இதெல்லாம் செய்து தராட்டி என்ன செய்வே....?"

"நினைத்ததை முடிப்பவனோட கைபேசி எண் இருக்கு. போட்டுக் குடுத்துடுவேன்...."

"ஏய்.... வேணாம். நீ சொன்ன மாதிரியே செஞ்சிடுறேன்... ஃபோன் எதுவும் செஞ்சிடாதே...."

(தொடரும்....)

★நீங்கள் மன்னிப்புக் கேட்கப்போகும் நபர் உங்களைவிடக் குறைந்த நிலையில் இருந்தாலும் தயங்காது மன்னிப்பு கேட்க வேண்டும். இல்லாவிடில் அந்த உறவு முழுமையாக சிதைந்துவிடும். மன்னிப்பு கேட்டு அது ஏற்கப்படா விட்டால் என்ன செய்வது என்று கவலைப் பட வேண்டியதில்லை. என்ன சொல்வாரோ என்று மன்னிப்பு கேட்கத் தயங்கினால் வாழ்நாள் முழுவதும் எந்தத் தவறுக்கும் மன்னிப்புக் கேட்கப் போவதில்லை. மன்னிப்புக் கேட்பதனால், தவறை மீண்டும் செய்ய மாட்டோம்; மற்றவர்களுடன் உறவும் சீரடையும். வாழ்க்கை சுமுகமாகும்.

## இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

**21.03.13**

**முதல்**


**27.03.13 வரை**

| | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் |
|---|---|---|---|---|---|---|---|
| மேஷம் | ஆர்வம் | பொறுமை | சாந்தம் | செலவு | புகழ் | போட்டி | இன்பம் |
| ரிஷபம் | தேர்ச்சி | நற்செயல் | உதவி | ஆக்கம் | தெளிவு | நன்மை | சுகம் |
| மிதுனம் | வரவு | இலாபம் | பக்தி | அனுகூலம் | ஆக்கம் | மேன்மை | ஆக்கம் |
| கடகம் | கவலை | ஆதரவு | கவலை | முயற்சி | விவேகம் | பிரீதி | செலவு |
| சிம்மம் | வெற்றி | வரவு | சுபம் | கவலை | உயர்வு | களிப்பு | போட்டி |
| கன்னி | முயற்சி | கவனம் | விருத்தி | யோகம் | போட்டி | வெற்றி | உதவி |
| துலாம் | போட்டி | செலவு | பாராட்டு | ஏமாற்றம் | தனம் | ஆர்வம் | இலாபம் |
| விருச்சிகம் | அனுகூலம் | புகழ் | பரிசு | மேன்மை | அலைச்சல் | பரிவு | நற்செயல் |
| தனுசு | நன்மை | பாராட்டு | சுகம் | அன்பு | பகை | தனம் | வெற்றி |
| மகரம் | சுகம் | மகிழ்ச்சி | நன்மை | மகிழ்ச்சி | ஓய்வு | அனுகூலம் | அச்சம் |
| கும்பம் | கவனம் | அன்பு | அனுகூலம் | அமைதி | வரவு | புகழ் | ஏமாற்றம் |
| மீனம் | மேன்மை | பக்தி | வெற்றி | போட்டி | நன்மை | உயர்வு | கவலை |



பத்தனை திம்புள்ள கீழ்ப்பிரிவு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா கடந்த வாரத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட ஆலய பரிபாலன சபையினர், தோட்டத் தலைவர்கள், பக்தர்களையும் இங்கு காணலாம்.

எம்.பாஸ்கர் கிரிமிட்டிய





பன்விலை ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயத்திற்கான வெப்தளமொன்று ஆரம்பித்துவைக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட மத்திய மாகாண சுகாதார அமைச்சரும் பிரபல சட்டத்தரணியுமான சுனில் அமரதுங்க அழைத்துவரப்படுதையும், வெப்தளம் ஆரம்பித்து வைக்கப்படுவதையும், அருகில் சைவமகாசபைத் தலைவர் எஸ்.சுரேஷ்குமார் நிற்பதையும், கலந்துகொண்ட பொதுமக்களையும் இங்கு காணலாம்.

எம்.நவநிதன்

# காமன் திருவிழாவில் சிறப்புப் பட்டிமன்றம்!

லுணுகலை அடாவத்தை தமிழ் கலா மன்றத்தின் ஏற்பாட்டில் லுணுகலை பிரதான வீதி மிலேனியம் டொட்கொம் நிறுவனத்தின் அனுசரணையுடன் 23 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 9 மணிக்கு காமன் திருவிழாவை முன்னிட்டு சிறப்புப் பட்டிமன்றம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

200 வருட வரலாற்றைக் கொண்ட மலையக சமூகம் வளர்ச்சி கண்டுள்ளதா? வளர்ச்சியடையவில்லையா? என்ற தலைப்பின் கீழ் இடம்பெறவுள்ள இப் பட்டிமன்றத்தின் நடுவர் அதிபர் முருகையா தலைமையில் ஆசிரியர் சுரளிதரன், ஊடகவியலாளர் எஸ்.சந்திரமோகன், இந்து சமய தர்மாசிரியர் எஸ்.இராஜதுரை, லுணுகலை பிரதேச செயலக உத்தியோகஸ்தர்களான வி.விக்னேஸ்வராஜ், வி.செல்வகுமார், ஜீ.மகேந்திரன் ஆகியோர் பேச்சாளர்களாக பங்குபற்ற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

லுணுகலை நிருபர்

நான் தோற்கமாட்டேன் என்ற பொய்யை ஒருபோதும் சொல்லமாட்டேன் - ஆனால் வெல்லாமல் விடமாட்டேன் என்ற உண்மையை நிரூபிக்காமல் விடமாட்டேன்...!






யாருடன் பழகுகின்றாய் என்பதையும், யாருடன் நட்புக் கொள்கின்றாய் என்பதையும் தெளிவாக அறிந்து கொள்..!, ஏனெனில் குயில் அழகிய தோட்டங்களுக்கும், காகம் குப்பை மேடுகளுக்கும் உன்னை அழைத்துச் செல்லும்...!



பரீட்சைக்கு படிச்சிட்டு வர்றவன் மனுஷன், படிச்சிட்டு வந்து நண்பனுக்கு காட்டுறவன் பெரிய மனுஷன், பரீட்சைன்னே தெரியாம வர்றவன் ரொம்ப பெரிய மனுஷன்...




# கொஞ்சம் சிரிக்க சிந்திக்க



இறக்கத்தான் பிறந்தோம் அது வரை இரக்கத்தோடு இருப்போம்!!!

பிறரை அதிகமாக நேசிப்பவன் மட்டுமே அதிகம் காயப்படுகிறான்!




பிரச்சினை வயிறு தான்! பாதிப் பேர் குறைக்க ஓடிக் கொண்டிருக்கிறார்கள்! பாதிப் பேர் நிறைக்க ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.

வாழ்க்கையைப் பற்றி அதிகம் தீவிரமாக சிந்திக்காதீர்கள்..! என்ன தான் இருந்தாலும் போகும் போது உயிரோடு போக மாட்டீர்கள்...



இறைவன் எங்கும் நிறைந்திருக்கையில் எதற்காக இத்தனை கோயில்கள்? இந்தக் கேள்விக்கு அறிவாளி ஒருவர் அளித்த பதில் - காற்று எங்கும் நிறைந்திருந்தாலும் அதை உணர்வதற்கும் நமக்கொரு காற்றாடி தேவைப் படுகிறதல்லவா அதேபோல்தான் இதுவும்.



தேவைப்படும்போது கொடுப்பதுதான் உதவி...! இருக்கும்போது தருவதற்கு பெயர் தான் பிச்சை...

## உங்கள் கையெழுத்து கூறும் உங்கள் தலையெழுத்து என்ன? வாங்க பார்க்கலாம்..!

✱ பெரிய எழுத்தாக எழுதுகிறவர்கள் பேரார்வம் மிக்க அதிக நம்பிக்கை உள்ளவர்களாகவும் அதிகாரப் பிரியர்களாகவும் இருப்பார்கள்.

✱ சிறிய எழுத்துக்காரர்கள் எந்த வேலையையும் திட்டவட்டமாக ஒழுங்காகச் செய்வார்கள். ஆனால், தன்னம்பிக்கையும், துணிவும் இல்லாதவர்கள்.

✱ எழுத்துகளை வலப்பக்கமாக சாய்த்து எழுதுகிறவர்கள் எதிர்காலத்தில் நம்பிக்கையும் வாழ்வில் இன்பங்களையும் காண்கிறவர்கள்.

✱ இடப்பக்கம் சாய்த்து எழுதுகிறவர்கள் பயந்த சுபாவம் கொண்டவர்களாக இருப்பார்கள்.


✱ சொற்களுக்கு இடையே நிறைய இடம் விட்டு, எழுத்துகளை தனித் தனியே பிரித்து எழுதுகிறவர்கள் சமூகத்தில் ஒட்டி உறவாடாமல் தனித்தே நிற்பார்கள்.

✱ சங்கிலித் தொடர்போல எழுதுகிறவர்கள் எதிலும் பற்றுடையவர்கள்.

✱ சுழிகளை அளவுக்கு மீறி அதிகமாக சுழிப்பவர்கள் விடாமுயற்சியும் சுறுசுறுப்பும் உடையவர்கள்.

✱ எழுத்துகளை நிறுத்தி நிதானமாக அழகாக எழுதுகிறவர்கள் கடின சித்தமும் கலை உள்ளமும் கொண்டவர்கள்.



அப்பா : எப்படி இந்தளவு போன் பில் வந்தது. நான் என் அலுவலகத்தில் உள்ள போன் தான் பயன்படுத்துகிறேன். இங்கிருந்து ஒரு போன் கூட செய்வதில்லை.

அம்மா : நானும் அலுவலக போனைத்தான் பயன்படுத்துகிறேன். வீட்டில் ஒரு போன் கூட பண்றது கிடையாது.

மகன் : நான் என் அலுவலகத்தில் தந்த மொபைல் போனைத் தான் உபயோகிக்கிறேன். அதுவரை அமைதியாய் இருந்த வேலைக்காரனை மூவரும் பார்த்தனர்.

''நானும் என் அலுவலகத்தில் உள்ள போன் தான் உபயோகிக்கிறேன். மற்றப்படி எனக்கு எதுவும் தெரியாது'' என்றான்.

## நம் வாழ்க்கை




ஏறும் விலைவாசி




தங்கம் விலை



மரக்கறி விலை



மொபைல் பில்



என் சம்பளம்

எல்லா அழிவுகளுக்குப் பின்னும் இரண்டு அர்த்தம் இருக்கிறது ஒன்று அக்கறை!!! இன்னொன்று பொறாமை...!

# மருத்துவமனையில் பெண் பேய்!



இந்தியாவிலுள்ள முக்கிய மருத்துவமனையொன்றில் (பெயர் தவிர்க்கப்பட்டுள்ளது) கடந்த சில மாதங்களாக ஒரு பெண் பேய் உலவி வருவதாக மக்கள் மத்தியில் பீதி ஏற்பட்டுள்ளது! பலரின் செல்போன்களிலும் இந்த பேய் வீடியோ காட்சிகள்தான் இப்போது முதலிடம் பிடித்திருக்கிறது. தமிழகப் பத்திரிகையொன்றில் வெளியான அந்த திகில் அனுபவத்தை உதயசூரியன் வாசகர்களுக்காகத் தருகிறோம்.

''ஐடா ஸ்கடர்'' என்ற வெளிநாட்டுப் பெண் இந்தியா வந்தபோது, சரியான மருத்துவ வசதி இல்லாமல் பலர் மடிகிறார்களே என்ற நல்லெண்ணத்தில் 1901 இல் ஆரம்பிக்கப்பட்டதுதான் இந்த மருத்துவமனை. இங்கு அனைத்து நோய்களுக்கும் உரிய சிகிச்சை அளிக்கப்படுவதால், உலக அளவில் பிரபலம் பெற்றுள்ளது. எனவே, உள்ளே நோயாளிகளுக்குத் தங்க இடம் இல்லாதபோது, பெரும்பாலானோர் அருகில் இருக்கும் லொட்ஜ்களில் மாதக்கணக்கில் தங்கி சிகிச்சை பெற்றுச் செல்வார்கள்.

இந்த நிலையில்தான் இந்த பேய்ப்பீதி எழுந்திருக்கிறது. மருத்துவமனைக் காவலாளி ஒருவர் இந்த பேய் பீதி குறித்து இவ்வாறு கூறுகிறார்.

சேர் இங்க ஆறு வருஷமா வேலை செய்றேன். நீங்கள் கேள்விப்பட்டது சத்தியமா உண்மை. இப்பக்கூட எனக்கு கை நடுங்குது பாருங்க. ரெண்டு நாட்களுக்கு முன்னாடி, எங்க செக்யூரிட்டி ஒருத்தர் டியூட்டி பார்த்துக் கொண்டிருந்தார். இரவு கீழே உட்கார்ந்து சாப்பிட்டுட்டு இருக்கும்போது, யாரோ பின்னால் தட்டின மாதிரி இருந்திருக்கு. திரும்பிப் பார்த்தா யாருமே இல்ல. சாப்பிட்டுட்டுக் கை கழுவப் போனா பக்கத்துல ஒரு வெள்ளை உருவம் மட்டும் நின்னுருக்கு. அவர், பயந்துபோய் யாரு யாரு?ன்னு குரல் கொடுத்து இருக்கார். அது பதில் சொல்லாம, அப்படியே மறைஞ்சிருச்சு. அதைப் பார்த்ததில் இருந்து, அவருக்குத் தொடர்ந்து காய்ச்சல். எவ்வளவோ மருந்து-மாத்திரைகள் கொடுத்தும், நிக்கலை, வேலைக்கும் வர முடியாமக் கிடக்கிறார்'' என்றார் பயத்தோடு.

''இரவு டியூட்டியில் இருக்கும்போது சிறிது கண் அயருவோம். அப்ப எங்களை யாரோ உசுப்பிவிடுவது போல் தெரியும். பதறி எழுந்து பார்த்தால், யாருமே இருக்க மாட்டார்கள். இதை, இங்குள்ள பெரும்பாலான செக்யூரிட்டிகள் உணர்ந்துள்ளோம். இது புதிய சம்பவம் அல்ல என்கிறார்கள் மற்றக் காவலாளிகள்.

வைத்தியசாலை பணியாளர் ஒருவர் தெரிவிக்கையில்: ஒரு நாள் நான் இரத்த போத்தலை எடுத்துட்டுப் போயிட்டு இருந்தேன். அப்போ என்னை யாரோ கூப்பிடுறது மாதிரி இருந்தது. திரும்பிப் பார்த்தேன். யாருமே இல்லை. திடீர்னு, நில்லுடான்னு ஒரு பெண் குரல் அதட்டலாக் கேட்க, பயந்து திரும்பினேன். ஒரு அழகான பொண்ணு, வெள்ளை டிரெஸ்ல தலையை விரிச்சுப் போட்டு நின்னது. என் பக்கத்துல வந்து, எனக்கு ரொம்பப் பசி! குடிக்க அந்த இரத்தத்தைக் குடுன்னுச்சு. நான் திடுதிடுன்னு அந்த இடத்தைவிட்டு ஓடி வந்துட்டேன் என்றார்.

இந்தப் பேய் காட்சியை யாரோ வீடியோவாக எடுத்ததாக, பலரின் செல்போன்களிலும் உலவுகிறது. சரியாகப் புலப்படாத வெள்ளை உருவம், ஒரு அறையில் இருந்து இன்னொரு அறைக்கு ஊடுருவிச் செல்வது போன்று அந்தக் காட்சி உள்ளது. எனினும், இது ஏதோ கிராபிக்ஸ் வேலை என்று பலர் சொல்கிறார்கள். எனினும், அங்குள்ள ஊழியர்களும் நோயாளிகளும் பேயை நேரில் பார்த்ததாக அடித்துச் சொல்கிறார்கள்.

இது யாரோ மருத்துவமனைக்கு அவப் பெயரை உண்டாக்கச் செய்த சதி வேலை. இது 100 சதவிகிதம் கிராபிக்ஸில் செய்யப்பட்ட விஷம வேலை. இங்கு பேயும் இல்லை பிசாசும் இல்லை என்கிறார்கள் மருத்துவமனையின் நிர்வாகத் தரப்பினர்.

எது எப்படியிருந்தபோதும் இங்கு சிகிச்சை பெற வந்த நோயாளிகள், நோயைப்பற்றி பேசுவதைவிட பேயைப் பற்றி பேசுவதுதான் அதிகமாக இருக்கிறது!

தகவல் தொகுப்பு - அபி

## திகில் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்

பேய் இருப்பது உண்மையா? பொய்யா என்ற விவாதங்கள் ஒரு புறமிருக்க பேய் என்ற பெயரைக் கேட்டதுமே பலருக்கு கிலி பிடித்துவிடும். நள்ளிரவு, தனிமை போன்ற சூழ்நிலைகளில் சும்மா ஒரு கயிற்றுத்துண்டைக் கூட பேய் என நினைத்து அலறிவிடுவார்கள். நீங்கள் அல்லது உங்கள் நண்பர்கள் சந்தித்த பேய் பற்றிய அனுபவம் உள்ளதா? அதை எமது வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

எமது முகவரி
உதயசூரியன் திகில் அனுபவங்கள்
தினக்குரல் இல-68, எலிஹவுஸ் வீதி,
கொழும்பு 15.


























# கலாட்டா





## ஆல்பம்

எப்படி இருந்தவங்க இப்படி ஆயிட்டாங்களே என்று நாம் அடிக்கடி சொல்வதுண்டு. ஆம்! காலம் எப்படிப் போகிறது என் பதை பார்த்தால் வியப்பாகத்தான் இருக்கிறது. நடிகை கார்த்திக்கின் ஆல்பம் இங்கே உங்களுக்காக!

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டாரால் (68,எலிஹவுஸ் ரோட், கொழும்பு 15) 21.03.2013 வியாழன் 94, பரமானந்த மாவத்தை கொழும்பு-13 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.